


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET
kalmunainet.com
e paper




தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் ஆனி 12 [26.06.2021] இதழ் : 22

# பயங்கரவாத தடைச்சட்டம் ஜனநாயகத்திற்கு விரோதமானது!

## முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்கிறார் ஜனா எம்.பி.




(வேதசகா)

1978ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு ஜனநாயக விரோத செயற்பாடாகும். அச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக இலங்கை தமிழர் தரப்பில் பேசுபொருளாக விருந்து வந்த தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் இவ்வாரம் ஒரு முக்கிய கட்டத்தையடைந்துள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஜனா கல்முனைநெற்றுக்கு

02

# உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்ய இடமளியோம்!



நமது நிருபர்

“இன்று எமது நாட்டு மக்கள் இனியும் ஒற்றையாட்சி குறித்து அச்சமடையத் தேவையில்லை. எமது உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு அரசாங்கம் எந்த வகையிலும் இடமளிக்காது. தேசிய பாதுகாப்பை எனது அரசாங்கம் உறுதிசெய்துள்ளது"

02

# "சவாலை ஏற்றோம்: நிறைவேற்றினோம்"

## என்கிறார் சுரேன் ராகவன்

நமது நிருபர்

நாடாளுமன்றத்திலே நேற்று முன்தினம் ஒரு தமிழ் தேசியத் தலைவர் என சொல்லிக்கொள்பவர் அரசாங்கத்தையும் என்னையும் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு சவால் விடுத்தார். முடியுமானால் செய்து காட்டுங்கள் என்றார். அந்த சவாலை நாங்கள் ஏற்றுக்கொண்டு

02




# கிழக்கில் 255பேர் பலி! 14ஆயிரத்தை நெருங்கும் தொற்றுக்கள்!



(வேதசகா)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா காரணமாக இதுவரை 255 பேர் பலியாகியுள்ளனர். அதே வேளை தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்தை அண்மித்துள்ளது என கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள

02

# தென்கிழக்கு பல்கலையின் புதிய உபவேந்தராக பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்



நமது நிருபர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் அப்பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவி உயர்வு 09. 08. 2021 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கை தென்

02


# 74 மரண தண்டனைக் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டம்

நமது நிருபர்

மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் தமக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக தளர்த்துமாறு கோரி 74 மரண தண்டனைக்கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

02

# யாழில் புலிகளின் பெயரில் எச்சரிக்கை சுவரொட்டி!


எச்சரிக்கை......!!!

அன்புக்குரிய எமது மக்களே!
நாங்கள் உங்கள் காவல்தெய்வங்கள்
மீண்டும் எங்கள் மண்ணில் கால்பதித்துள்ளோம்.

எனவே எமது உரிமைகள்.
எமது கலாச்சாரங்களை பாதுக்காக்க
வேண்டிய ஓர் கட்டாய பொறுப்பை காலம் எம்
கையில் தந்துள்ளது.

இராணு ஆதரவாளர்கள்.
பெண்கள் வன்முறையாளர்கள்.
போதை வன்செயல்கள்.
தேவையற்ற ஒட்டுக்குழுக்கள்.
சமூக சீர்கேடு புரியும் பெண்கள்.

போன்று பாரிய குற்றச்செயல்களில் ஈடுபடுவோர்
விரைவில் எம்மால் களையெடுக்கபடுவார்கள்.

அந்த வகையில் முதற்கட்டமாக
இந்த யாழ்/மணியம்தோட்டம் கிராமத்தில்
பெண்களுக்கெதிரான வன்செயல்கள் புரிந்த நபர்
எம்மால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

எனவே அவருக்கான தண்டனை இன்றில் இருந்து
7நாள்களுக்குள் இந்த கிராமத்தில் எமது விசேட
அணியால் நிறைவேற்றப்படும்.

“நன்றி”
“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”

இப்படிக்கு
பாதுகாப்பு படையணி.
N.G.T
தமிழீழம்.
N.G.T

நமது நிருபர்

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் நேற்று புலிகளின் பெயரில் ஒட்டப்பட்ட சுவரொட்டியினால் பரபரப்பு ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்டு கலாச்சார சீரிழிவு உள்ளிட்ட சில விடயங்களில் ஈடுபடுபவர்களிற்கு தண்டனை நிறை

02




# இலங்கை கடற்பரப்பில் எம்எஸ்சி கப்பலில் தீ!




நமது நிருபர்

இலங்கைக்கு கடற்பரப்பில் மற்றுமொரு கப்பல் தீப்பரவலுக்கு உள்ளாகியுள்ளது என ஸ்ரீலங்கா கடற்படையினர் தெரிவித்துள்ளனர் கொழும்பில் இருந்து சிங்கப்பூர் நோக்கி பயணித்த ‘எம்எஸ்சி மெஸ்சினா’ என்ற கப்பல் ஒன்றிலேயே இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

02


# வார இறுதியில் பயணக் கட்டுப்பாடு இல்லை..!

நமது நிருபர்

வார இறுதி நாட்களில் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்தாதிருப்பதற்கு கொவிட்-19 தடுப்புக்கான செயலணி தீர்மானித்துள்ளது.

02

# நாளை யாழ். வடமராட்சியில் இயற்கை உர தொழிற்சாலை!



நமது நிருபர்

யாழ் வடமராட்சி முள்ளியில் சுமார் 23 கோடி பெறுமதியான சேதன குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை நாளை (27) ஞாயிற்றுக் கிழமை திறக்கப் படவுள்ளது.

ஜப்பான்நாட்டின்ஜெய்க்காநிறுவனத்தின் உதவி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சாலையால் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் கிலோ உரத்தை உருவாக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் 9 மாகாணத்துக்கும் ஒரு திட்டம் வழங்கப்பட்ட நிலையில் வட மாகாணத்துக்கான திட்டம் கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.



## பயங்கரவாத தடைச்சட்டம்...

சமகால நிலைவரம் தொடர்பில் கருத்துரைத்தார்.

உண்மையில் பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் தமிழர் போராட்டத்தை நசுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்ட இச்சட்டமானது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. மாறாக போராட்டம் வீரியமடைந்ததே வரலாறு.

மக்கள் குறிப்பாக சிறுபான்மையினர் அரசுக்கெதிராக கிளர்ந்தெழ முடியாது வாய் திறக்கக் கூடாதென்பதே அவர்களது எதிர்பார்ப்பாகவிருந்தது. அதனை ஒரு ஜனநாயக விரோத செயற்பாடு என ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவித்துள்ளது.

இதனைத்தான் நாங்களும் கடந்த காலங்களில் கூறி வந்திருக்கிறோம். இத்தடைச் சட்டத்தை நீக்கி நாட்டில் நிரந்தர அரசியல் தீர்வை கொண்டு வாருங்கள். அப்போது நாட்டில் குழப்பமும் வராது போராட்டமும் இருக்காது.

## யாழில் புலிக...

வேற்றப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஒரேயொரு சுவரொட்டி மட்டும் ஒட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த சுவரொட்டியை யார் ஒட்டியது என்பது குறித்து பொலிசார் இராணுவ புலனாய்வாளர்கள் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தென்கிழக்கு பல்கலை...

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் சமூகவியல் முதற் தொகுதி மாணவராக கல்வி கற்று, அப்பீடத்தின் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு, முதல் சமூகவியல் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றவர். பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் இளவயதில் (43) உப வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் அப்பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவர் உப வேந்தராக நியமிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

### அழுத்தமா..? யதார்த்தமா..?

'மிஸ்டர் கிளீன்' என தன்னைக் காட்டிக் கொள்ளும் ரணில் விக்கிரமசிங்ககூட, நல்லாட்சியில் அரசியல் காய் நகர்த்தல்களுக்காகவே கைதிகள் விவகாரத்தை பயன்படுத்தினார்.

அதேபோல, நல்லாட்சியில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் தெளிவாக முடிவெடுக்கத் தயங்கினார். பொலநறுவையில் வைத்து அவரை கொலை செய்ய முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டிருந்த ஒரு தமிழ் இளைஞனுக்கு பொது மன்னிப்பு வழங்கியஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன, கொழும்பில் பெரு விழா எடுத்து அந்த இளைஞனை விடுதலை செய்தார்.

நல்லாட்சியில் நடந்த ஒரு சம்பவம். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தமிழ் குடும்பஸ்தரின் மனைவி கிளிநொச்சியில் மரணமடைந்தார். இறுதிச் சடங்கில் பங்கு கொள்வதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. கிரியைகள் நடத்தி முடித்த பின், இரண்டு பிள்ளைகளின் தந்தையான கைதியை சிறைக் காவலர்கள் மீண்டும் பஸ்ஸில் ஏற்றிய போது, அவரது 3 வயது சிறுமியும் கூடவே பஸ்ஸில் ஏறினார். தாயின் அரவணைப்பில் இருந்த அந்த சிறுமி, அனாதரவான நிலையில் தந்தையுடன் செல்ல பஸ்ஸில் ஏறிய காட்சி அனைவரையும் பதறச் செய்தது. அந்தச் சிறுமிக்காக சிங்கள மக்களும் கண்ணீர் சிந்தினர்.

சிறுமியின்பரிதாபநிலையை அறிந்தசிங்கள ஊடகங்களும்இதனைமிகவும்உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியதோடு, தமிழ் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுத்தன. என்றாலும்,நல்லாட்சிவழங்குவதாகக்கூறிய மைத்திரிபால சிறிசேன, அதனை கண்டு கொள்ளவே இல்லை. அதற்கு அப்போதைய எதிரணி கொடுத்த இனவாத அழுத்தங்களும் ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும்.

### தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை!

ஜி. எஸ். பி. பிளஸ் சலுகை நிறுத்தப்படுமென்ற அழுத்தம் இன்று தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வைத்திருக்கின்றது. ஜனாதிபதியினால் பொசோனன்று விடுதலை செய்யப்பட்ட 16 பேரில் ஒருவராவது கிழக்கைச் சேர்ந்தவர் இல்லை என்பது கவலைக்குரிய விடயம்.

அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சம்பவத்தில் மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த 10 பேர் கைதுசெய்யப்பட்டு இதே சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் முகநூலில் தவறாக பதிவிட்டார்கள் என்ற பெயரிலும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எதுஎவ்வாறெனினும் ஜனாதிபதியின் செயற்பாட்டை நாம் வரவேற்கிறோம். அமைச்சர் நாமல் ராஜபக்சவிற்கும் நன்றிகள். அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். அதற்கு அமைச்சர் நாமலும் ஜனாதிபதியும் அடுத்த பொசோன் வரைக்கும் காத்திராது விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## உள்ளக ...

நேற்று (25) இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தகால தவறுகளை திருத்திக் கொண்டு முன் நோக்கிப் பயணிக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தனதுரையில் அவர் மேலும் தெரிவிக்கையில். கடந்த ஆட்சிக் காலத்தில் மறக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். பாதாள உலகை கட்டுப்படுத்தியுள்ளோம். போதைப் பொருள் கடத்தல் பாவனையையும் ஓரளவுக்கு கட்டுப்படுத்தியுள்ளோம். எமதுகலாசாரம் உட்பட அனைத்தையும் அவமானப்படுத்தும் யுகத்தை நிறுத்தினோம்.

அனைவரினதும் அடையாளங்களைப் பாதுகாத்து மற்றவர்களுக்கு இடையூறு அற்ற சமாதானமான சூழலை உருவாக்கிக் கொடுத்துள்ளோம். கடந்த காலத்தில் அச்சுறுத்தலை எதிர்கொண்ட அம்பாறை பொத்துவில் கடலோர விகாரை தீகவாவி போன்ற கலாசார மத உரிமைகளை நாங்கள் பாதுகாத்துள்ளோம்.

தனது ஆட்சியில் எந்த அரசியல் நியமனங்களும் மேற்கொள்ளவில்லை என்றும் நீதித்துறையிலும் அதேபோன்ற கொள்கையையே பின்பற்றியதாகவும் குறிப்பிட்ட அரச தலைவர் கோட்டாபய கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளைதிருத்திக்கொண்டு முன் நகர்ந்து பயணிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியது போல, ஒவ்வொரு அரசியல் கைதியும் தங்களது தண்டனைக் காலத்தை விடவும் கூடுதலான காலத்தை சிறையில் கழித்து விட்டனர் என்பதே உண்மை.

புலிகள் இயக்கத் தலைவர்களுக்கு அப்போதே, பொதுமன்னிப்புவழங்கப்பட்டுள்ள நிலையில்,புலிகளுக்குஉதவியவர்களும்புலிகளுக்கு சாப்பாடு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களும் புலிகள் இயக்க சந்தேக நபர்களும் சிறைகளில் வாடுகிறார்கள்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவை, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல அமைப்புகளும் அமெரிக்காவும் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கின்றன. தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரமும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

இப்படியானதொரு நிலையில்தான் அமைச்சர் நாமல் வெளிப்படையாகவே இறங்கியிருக்கிறார். சர்வதேச அழுத்தங்களுக்கும் சவால்களுக்கும் பதில் அளிக்கும் வகையிலான ஒரு நடவடிக்கையாகவே அவரின் பாராளுமன்ற உரையை பார்க்க முடிகின்றது.

**"நல்ல முன்னெடுப்புக்களை குழப்ப வேண்டாம்"** என தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சாணக்கியனை பார்த்து அவர் பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

உண்மையில், கூட்டமைப்பின் அரசியல் சாணக்கியம் தோற்றுப் போனது தான் வரலாறு. தமிழ் கட்சிகளால் முடியாமல் போன விடயத்தை, சிங்கள அமைச்சர் ஒருவர் செய்து முடிக்கிறாரா? என்று பார்ப்போம்... விட்டுப் பாருங்கள். வீணாக வாய் விட்டு குழப்பி விடாதீர்கள். யார் குத்தியும் அரிசி ஆகட்டும்.

தமிழ் கூட்டமைப்புக்கும் ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் நாம் விடுக்கும் அன்பான வேண்டுகோள் இது.

## "சவாலை ஏற்றோம்...

நிறைவேற்றியிருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நேற்று (25) பத்தரமுல்லை நெலும்மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நடந்த ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழ் அரசியலில் நேற்று ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. இப்போதாவது இது நடந்திருப்பதைக் குறித்து ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அதேபோல தமிழ் அரசியலைப் பற்றி கரிசனையுடையவர்கள் சந்தோஷமடைய வேண்டியதுமாயிருக்கின்றது. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் முழுமையாக 93 கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். சாதாரணமாக ஒவ்வொரு பொசன் மற்றும் வெசாக் நாட்களில் இது நடைபெறும் விடயமாக இருந்தாலும் நேற்று நடந்த விடயத்திலுள்ள விசேட விடயம் என்னவென்றால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருந்த 16 பேர் விடுவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் எடுத்த இம்முயற்சி நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது. அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் தன்னுடைய வாழ்கையில் சிறையில் அனுபவித்த கண்ட கதைத்த தமிழ் பேசும் அரசியல் கைதிகளின் வேதனையை உணர்ந்தவராக பிரேரணையை முன்வைத்தார். முதன்படி ஜனாதிபதிக்கும் நாமல் ராஜபக்ஷ அமைச்சருக்கும் நிதியமைச்சர் அலிசப்ரிக்கும் எனது நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

மீதமுள்ள தமிழ் அரசியல் கைதிகளைக் கூட மீளாய்வுசெய்து படிப்படியாக அவர்களை விடுவிக்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டை அரசாங்கம் கொண்டுள்ளது.

## இலங்கை கடற்...

குறித்த கப்பலின் இயந்திர அறையில் தீ ஏற்பட்டுள்ள நிலையில், தீயை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிரிந்தை - மஹா இராவணன் கலங்கரை விளக்கத்தில் இருந்து கிழக்கு திசையில் 480 கடல் மைல்களுக்கு அப்பால் கப்பல் ஒன்றின் இயந்திர அறையில் தீப்பற்றி இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

## கிழக்கில் 255பேர்....

பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட 75 ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகளில் 72 ஆயிரத்து 176 ஊசிகள் நேற்று (25)வெள்ளி வரை ஏற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மட்டு.மாவட்டத்தில் 23306 பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 24105 பேருக்கும் திருமலைமாவட்டத்தில் 24155பேருக்கும்செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனைப் பிராந்தியத்திற்கு இன்னும் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கான முன்னாயத்த வேலைகள் சகல சுகாதாரப்பிரிவுகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் நேற்று (25) வரை கொரோனாவுக்கு 255 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 229 பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்களாவர். திருகோணமலை மாவட்டத்தில்இதுவரை125பேர்மரணித்துள்ளனர்.

கிழக்கில் இதுவரை மரணித்த 255 பேரில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 125 பேரும் அம்பாறைப் பிராந்தியத்தில் 26 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 69 பேரும்கல்முனைப்பிராந்தியத்தில் 35பேரும் மரணித்துள்ளனர்.

## 74 மரண தண்டனை...

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வருவதனால்மரணதண்டனையைஆயுள்தண்டனையாக மாற்றுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, மரண தண்டனை விதிக்கப்பட்ட 235 கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவது குறித்து ஏற்கனவே நீதி அமைச்சினால் ஜனாதிபதி செயலகத்திற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வார இறுதியில்...

இந்த செயலணி நேற்று (25) கூடிய போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என இராஜாங்க அமைச்சர் ஷன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் விதத்திலேயே, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லதீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்அவர் கூறுகின்றார்.



கல்முனை NET
kalmunainet.com
e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 77 6965343
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com
ceditorsaga@gmail.com

குறள் விருந்து

**பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன் தகைமைக்கண் தங்கிற்று உலகு.**

பகைவர்களையும் நண்பர்களாகக் கருதிப் பழகுகின்ற பெருந்தன்மையான பண்பை இந்த உலகமே போற்றிப் புகழும்.

# அழுத்தமா..? யதார்த்தமா..?

பொசன் தினத்தையொட்டி, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 93 கைதிகள் கடந்த வியாழனன்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில், 16 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களும் அடங்கும். விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே இவர்கள்.

ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கான ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகவே இதனைப் பார்க்க முடிகிறது. இது வரை காலமும் ஜனாதிபதிகளால் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக்களின் போது, தமிழ் அரசியல் கைதிகள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. புலிகள் இயக்க சந்தேக நபர்கள் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது முக்கியமான விடயம்.

இந்த நிலையில், அமைச்சர் நாமல் ராஜபக்சஷ கடந்த செவ்வாய்க்கிழமை (22. 06. 2021) பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை இன்று உள்நாட்டை மட்டுமல்ல, சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென அவர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசாங்க முக்கிய அமைச்சர் ஒருவர் அரசாங்கத்திடமே விடுத்திருக்கும் மிகச் சவால் மிகுந்த வேண்டுகோள் இதுவாகும்.

**“சில தமிழ்க் கைதிகளின் சிறைக்காலம் எனது வயதைவிடவும் அதிகம்”** என சுட்டிக்காட்டிய அவர், விசேட பொறிமுறை ஒன்றை உருவாக்கி சிறைகளில் வாடும் புலி சந்தேக நபர்களை விடுதலை செய்ய வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார்.

12 ஆயிரத்துக்கும் அதிகமான புலி சந்தேக நபர்களை புனர்வாழ்வளித்து அரசு விடுதலை செய்தது. அதேநேரம், சுமார் 3500 முன்னாள் போராளிகளை அரசாங்கம் அரச தொழில்களில் இணைத்துக் கொண்டது போல, காலம் காலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து சமூக மயப்படுத்த புதியதொரு பொறிமுறையை உருவாக்க வேண்டுமென்றார் நாமல்.

பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஓர் இளம் பாராளுமன்ற உறுப்பினரின் ஆதங்கமும் கோரிக்கையும் தமிழ் மக்களின் மனங்களை நெகிழ வைத்திருக்கிறதென்பது உண்மை. ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் வாரிசு தான் இவர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவரது தந்தை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவரது சிறிய தந்தை. அதேநேரம், இளைஞர், விவகார விளையாட்டுத்துறை அமைச்சராக இருக்கின்ற இவர், அமைச்சரவை அதிகாரம் உள்ளவர். இப்படி ஓர் அரசியல் பலம் உள்ள ஓர் இளைஞனின் கோரிக்கையை நாம் குறைத்து மதிப்பிட முடியாமல் தான் இருக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகளை நீதி விசாரணைக்கு உட்படுத்தி உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்பது தமிழ் கட்சிகளின் காலங்காலமான கோரிக்கையாகும்.

ஆட்சியில் இருந்த அரசுகள் எல்லாம் அரசியல் காய்நகர்த்தல்களில் ஈடுபட்டார்களே ஒழிய, உரிய நடவடிக்கை எடுக்கவும் இல்லை; கருணையும் காட்டவில்லை என்பதே உண்மை. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, ஆயுதம் மௌனித்து, கிட்டத்தட்ட பன்னிரண்டு ஆண்டுகள் முடிவடைந்து இருக்கின்றன. அதிகாரத்திலிருந்த நல்லாட்சியும் சரி, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசும் சரி, கைதிகள் விவகாரத்தை ஏட்டிக்குப் போட்டியான அரசியல் காய் நகர்த்தல்களுக்கே பயன்படுத்தினர்.

தமிழ் அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுங்கள் என்று தமிழ் கட்சிகள் தொடர்ந்தும் அழுத்தங்கள் கொடுத்து வந்தன. என்றாலும், ஆளும் கட்சிகள் அதனை நிராகரித்து வந்தது மட்டுமல்ல, அரசியல் கைதிகள் என்று எவரும் இலங்கை சிறைகளில் இல்லை என்றும் அறிவித்தார்கள். ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசும் இதே பதிலையே பாராளுமன்றத்தில் வழங்கியிருந்தது.

இந்த நிலையில், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரான நாமல் ராஜபக்ஷ விடுத்திருக்கும் துணிகரமான அறிவிப்பு, தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் கொஞ்சம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின், தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளில் நேரடியாக ஈடுபட்டு வந்தவர் நாமல் ராஜபக்ஷ. அவர் எடுத்திருக்கும் இந்தப் புதிய அவதாரம் அரசாங்கத்தின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றமாகவே பார்க்க முடிகிறது.

உண்மையில், தமிழ் கைதிகள் தொடர்பான இவரது குரல், உள்ளத்திலிருந்து எழுந்த சிந்தனை மாற்றமா? அல்லது வெளிநாட்டு அழுத்தங்களால் ஏற்பட்ட உந்துதலா? என்பது புரியவில்லை. எது என்றாலும், மனிதாபிமானத்தோடு அணுக வேண்டிய பிரச்சனை இது.

மிகுதி 2ஆம் பக்கம்

# பாவப்பட்ட கைதிகள்!



**கடந்த** ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக தமிழர் தரப்பில் பேசுபொருளாக இருந்து வந்த தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்திற்கு தற்போது அரச தரப்பிலிருந்து பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர்களுக்கு பேரினவாதத்தின் விளைவாக கொடுக்கப்பட்ட இன்னல்களில் ஒன்றுதான் மீளமுடியாத இந்த சிறைவாசம். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டால் கேட்பதற்கு இங்கு எவருக்கும் நாதியில்லை. பாவப்பட்ட கைதிகள்.

இப்பொழுது சில கைதிகளின் விடுதலை தொடர்பில் கீற்றுவெளிச்சம் தெரிகிறது. அது ஜி. எஸ். பி இனால் ஆகட்டும் ஐக்கிய நாடுகள் சபையினால் ஆகட்டும் அல்லது வேறு எந்த காரணங்களினால் ஆகட்டும் கைதிகள் விடுதலை என்பதே பெரும் நிம்மதியான விடயம். அதற்கப்பால் அரசியலிலும் ஒருவிதமான நம்பிக்கையூட்டுகிற் போக்கும் தென்பட ஆரம்பித்துள்ளது.

அவர்கள் தங்களது வாழ்க்கையை மட்டுமல்ல தம்மை சுற்றி இருக்கின்ற குடும்பத்தினரின் வாழ்க்கைகளையும் பல ஆண்டுகளாக தொலைத்துவிட்டு நிற்கிறார்கள்.

வெண்ணை திரண்டு வருகின்ற பொழுது சுயநல அரசியலுக்காக தாழியை உடைத்து விடாதீர்கள் என்ற குரல் தமிழ் பொதுமக்கள் மத்தியிலிருந்து எழ ஆரம்பித்துள்ளது.

ஆம் நீண்ட காலமாக சிறைகளில் இருந்த விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளில் ஒரு தொகுதியினர் பொசன் தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி சிறு குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்ற 77 கைதிகளும், நீண்டகாலமாக தடுத்து கைக்கப்பட்டிருந்த விடுதைப் புலிகளின் 16 முன்னாள் போராளிகளும் இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**‘மாடுவரும் பின்னே மணியோசை வரும் முன்னே’** என்பதற்கிணங்க ஆளுந்தரப்பிலிருந்து அதுவும் தலைமைகளுக்கு நெருக்கமான ஒரு அமைச்சரொருவர் இது விடயத்தை கட்டியம் கூறுவதாக பாராளுமன்றில் பேசியிருப்பது இதுவே முதற்தடவை எனலாம்.

அந்த வரலாற்று ரீதியான கருத்தைக்கூறிய இளவல் அமைச்சர் நாமல்ராஜபக்ச அவர்கள்தான்.

குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமல் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு நீதி வழங்கவேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ச வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கான உரிய நடைமுறைகளை உருவாக்க வேண்டும் என அவர் நீதியமைச்சரை கேட்டுக் கொண்டுள்ளார்.

எனது வயதை விட அதிக காலம் சிலர் சிறையில் உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஸ அரசியல் கைதிகள் தொடர்பாக உரையாற்றிய பின்னர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து சில குரல்கள்.


**சுமந்திரன்:** தமிழ்க் கூட்டமைப்பின் சார்பான நிலைப்பாட்டை ஆவணப்படுத்துகிறேன். நாமல் ராஜபக்ஸவின் கருத்தை வரவேற்கிறோம். இந்த விடயத்தில் அரசியல் வேறுபாடு இன்றி எமது ஆதரவு உண்டு. மேலதிகமாக பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி அண்மையில் சமூக ஊடக பதிவுகளுக்காக இச்சட்டத்தில் கைது செய்தவர்களையும் விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்:** ஜெனீவா மாநாடு ஆரம்பமாக உள்ள நிலையில்.. **GSP10** சலுகைக்காக மட்டுமே இந்த விடயத்தை அரசாங்கம் கையில் எடுத்துள்ளது.

**சரத்பொன்சேகா:** தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் செய்யாமல் அரசிற்கு ஆதரவளிக்க தயார்... என் மீது நடந்த தாக்குதலுக்கு உதவியளித்தவரும் 15 ஆண்டுகளாக சிறையில் உள்ளார். அவரையும் விடுதலை செய்யுங்கள்.

தமிழ் மக்களின் பார்வையில் இந்த விடுதலை என்பது அழுத்தமோ அல்லது மனிதாபிமான கருமமோ என்பதை தாண்டி இதனை வரவேற்கின்றோம். கடந்த நல்லாட்சியில் வழக்கு மூலமான நகர்த்தல், பொது மன்னிப்பு என பேசி அண்ணளவாக 120 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இன்று 16 என ஆரம்பித்த இந்த விடுவிப்பு ஒட்டுமொத்த அரசியல் கைதிகளின் விடுதலைக்கானதாக அமைய வேண்டும் என்பதாக அமைகிறது.

# டெல்டா எனும் புதிய வகை வைரஸ்



அண்மைக் காலம் முதல் நமது பக்கத்து நாடான இந்தியாவில் வேகமாக பரவி வரும் கோவிட்-19 வைரஸின் டெல்டா-DELTA (B.1.617.2) எனப்படும் புதிய வகை இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இப்புதிய வகை தொற்று நோய் வைரஸ் தற்போது நாம் எதிர்கொண்டு வரும் நெருக்கடி நிலைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் மற்றும் இது ஏற்கனவே பரவி வரும் கோவிட்-19 வைரஸிலும் பார்க்க என்ன விதத்தில் வேறுபடும் போன்ற தகவல்களை நாம் அறிவது நல்லது.

எனவே, இது பற்றிய GAVI (Global Alliance for Vaccines and Immunization) என்ற சர்வதேச நிறுவனத்தின் அறிக்கையின் அடிப்படையில் சில விடயங்களை அறிவது நல்லது.

பொதுவாக ஒரு வைரஸ் பரவும் போது அதன் விகாரப்படுத்தப்பட்ட வகையும் உருவாவது இயல்பே. இதன் போது ஏற்கனவே தோன்றிய வைரஸை வேகமாக பரவச் செய்யவும் இது போன்ற புதிய வகைகள் துணை புரிவதுண்டு. அதே போன்று. புதிய வகை, எற்கனவே உள்ள வைரஸ் வகையை விட அதி துரிதமாக பரவுவதுண்டு.

கோவிட்-19 முதலில் தோன்றிய காலகட்டம் முதல் இது போன்ற அதன் புதிய வடிவங்கள் பல நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இது போன்ற தருணங்களில் முன்பை விட நோய் எளிதாக தொற்றுவதும் நோய் பரவும் வேகம் துரிதமடைவதும் உண்டு.

இதேவேளை, கோவிட்-19 நோய்க்கு எதிராக தடுப்பு மருந்து பெற்றவர்களுக்கு டெல்டா (B.1.617.2) எனப்படும் இந்த புதிய வகையின் தாக்கத்தில் இருந்தும் தொடர்ந்து பாதுகாப்பு கிடைப்பதும் புலனாகியுள்ளது.

ஆனால், பொதுவாக தடுப்பு மருந்துகள் நூறு சதவீமான பாதுகாப்பை தருவதில்லை என்பதையூம் நாம் அறிதல் வேண்டும். இருந்தாலும், தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவிட்-19 தடுப்பு மருந்து செயல்திட்டமானது முதலில் தோன்றிய மற்றும் அதன் பின் உருவாகியுள்ள அனைத்து வகை வைரஸ்களில் இருந்தும் குறிப்பிடுமளவு பாதுகாப்பைத் தரவல்லதாகும். இருந்தாலும், அதிக சன நெரிசல் உள்ள (வெளிப்புறம் அல்லாத) இடங்களை தவிர்ப்பது மிக அவசியமாகும்.

முதலில் தோன்றிய கோவிட்-19 வகையைப் போன்றே புதிதாக தோன்றியுள்ள வைரஸின் நோய் அறிகுறிகள் தென்பட சில நாட்கள் ஆகலாம். சில வேளை வைரஸ் உடலில் இருந்த போதிலும் நோய் அறிகுறிகள் சிலருக்கு தென்படாமலேயே இருக்கலாம். அதிக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

**Delta (B.1.617.2)**

# இரா. பத்மநாதன்

## பல்துறை கலைஞர்

**வாரம் ஒரு படைப்பாளி**

இராசதுரை.பத்மநாதன் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் 19.07.1929 ம் ஆண்டு மட்டக்களப்பு நகரில் பிறந்தார். இங்குள்ள இங்குள்ள ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலை மத்திய கல்லூரி,சிவானந்தா வித்தியாலயம் அரசினர் கல்லூரி ஆகிய கல்விக்கூடங்களில் கல்வி கற்று சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் சித்தி பெற்று ஆங்கில ஆசிரியராக (1950~ 1954 )



கிரான்குளம் மெ .மி பாடசாலை,குருக்கள் மடம் மெ. மி பாடசாலை, களுதாவளை இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் பணி புரிந்துள்ளார். தனது 13 வது வயதிலேயே தமிழ்நாட்டிலிருந்து வெளியான ஹனுமன் வார ஏட்டில் இவரின் முதல் கவிதை இடம்பெற்றது. இதற்கு சன்மானமாக 3.50 சதம் கிடைத்துள்ளது. இந்த உந்துதலே இவரை எழுத தூண்டியது. 1955~1956 காலப் பகுதியில் வீரகேசரி தினசரியின் அதிபர் திரு. ஆர். எஸ் செட்டியாரின் அந்தரங்க காரியதரிசியாகவும்,வீரகேசரி உதவி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இக்காலக் காலக் கட்டதில் தென்கிழக்கு,தூரக்கிழக்கு நாடுகளுக்கு ஒன்பது மாத சுற்றுலாவும் மேற்கொண்டுள்ளார்.

1958~ 1961 வரை தென்னிந்திய சினிமா பத்திரிகை எழுத்தாளர் சங்க செயற்குழு உறுப்பினராக இருந்துள்ளார். இவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாகவும் இருந்துள்ளார். வீரகேசரி,தினகரன்,மற்றும் சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளுக்கு தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்,மற்றும் திரைப்படத்துறை தகவல்களை சேகரித்து கொடுத்துள்ளார். இந்த காலக் கட்டத்தில் இவருக்கு திரைப்படக் கலைஞர்களின் தொடர்பு கிட்டியது. இவர் சென்னை சென்று கண்ணதாசன் புரோடக்சனில் வந்த சிவகெங்கை சீமை கவலை இல்லாத மனிதன் ஆகிய படங்களுக்கு உதவி ஒளிப்பதிவாளராக இருந்துள்ளார். பத்மா பிலிம்ஸ் தயாரிப்பான அன்புக்கோர் அண்ணி படத்துக்கு உதவி இயக்குனராக இருந்துள்ளார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த பாசமலர் படத்தில் சிறு பாத்திரத்தில் நடித்ததோடு,கோஷ்டி நடனமும் ஆடியுள்ளார். பின்னர் இவருக்கு எம். ஜி. ஆர்,சிவாஜி,ஜெமினி,என். எஸ். கிருஷ்ணன், எம். ஆர்,ராதா போன்ற பல நடிகர்கள் நண்பர்களாக இருந்துள்ளனர். இவர்,1962~ 1966 வரை சுதந்திரன் வார ஏட்டின் இணை ஆசிரியராக இருந்துள்ளார். பின்னர் 1967~1969 வரை அமெரிக்க தூதரகத்தின் ஓர் அங்கமான அமெரிக்க தகவல் நிலைய தமிழ் பிரிவுக்கு பொறுப்பாளராக இருந்துள்ளார்.

அமெரிக்க செய்தி தமிழ் மாத இதழின் ஆசிரியராகவும் இருந்திருக்கின்றார்.

பின்னர்தான் இவர் இலங்கை வானொலிக்கு 1969 ல் நிகழ்ச்சி தயாரிப்பாளராக பதவியில் இணைகிறார்.

கிழக்கில் இருந்து சென்ற முதல் இலங்கை வானொலி பணியாளர் இவரே. இவர் வானொலியில் 1984 ஜூலை வரை பணியாற்றி உள்ளார்.15 வருட ஒலிபரப்பு சேவையில் இவர் பல நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி உள்ளார். ஊரைச் சித்திரங்கள்,வானொலி நாடகங்கள்,எழுதியதோடு அதில் பங்கேற்று நடித்தும் உள்ளார். இவர் பணி புரிந்த காலத்திலே நானும் வானொலியில் பணிபுரிந்தேன் என்பது எனக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். நான் இவரை அப்பா என்றுதான் அழைப்பேன். ஒருவகையில் உறவும் அவ்வாறே அமைந்துகொண்டது.இவர் இலங்கை வானொலிக்கு நேர்முக வர்ணனையாளராகவும் பணபுரிந்துள்ளார். அரசரீதியான நேரடி ஒலிபரப்புகளிலும் இருந்துள்ளார். வாரந்தோறும் ஞாயிறு இடம்பெறும் சிறுவர் மலர் நிகழ்ச்சியை தொகுத்து தயாரித்து வானொலி மாமா வாக திகழ்ந்தவர். ஆலய உற்சவகாலங்களில் இவரது நேர்முக வர்ணனை மிக சிறப்பாக இருக்கும், திருக்கேதீஸ்வரம், நல்லூர் முருகன் ஆலயம்,மாமாங்க பிள்ளையார் கோவில், திருக்கோவில் முருகன் கோவில் போன்ற ஆலயங்களில் இவர் நேர்முக வர்ணனை செய்துள்ளார். 1984 ம் ஆண்டு இவருக்கு இலங்கை வானொலி பிரியாவிடை கொடுத்தது. அந்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டு கண்ணீர் மல்க கவிதை வாசித்துள்ளேன்.பின்னர் 1984~1992 வரை இவர் சென்னையில் இருந்தார். மீண்டும் கலையுலகம்,திரைப்படத் தொடர்புகள்,~ தமிழ் நாட்டு பத்திரிகைகளில் சிறுகதைகள்,கட்டுரைகள் கவிதைகள் என்று எழுதியுள்ளார். அங்கு இயங்கிய ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவின் பிரதம ஒருங்கிணைப்பாளாராக இருந்துகொண்டு,சென்னை ஆல் இந்தியா வானொலியின் பகுதிநேர செய்தி ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார்.



1993 ல் மீண்டும் நாடு திரும்பி தினமுரசு பத்திரிகையின் கௌரவ ஆசிரியராக இருந்துள்ளார் இந்த காலத்திலே எம். ரி. வி தொலைக்காட்சியில் வாரந்தோறும் இந்தியில் ஒளிபரப்பான 94 அங்கங்களை கொண்ட தொடரை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இராமாயண காப்பியதை இலகு தமிழில் வாராவாரம் எழுதிப் பிரசுரித்து பின்னர் அதை இந்து கலாசார அமைச்சின் ஊடாக 640 பக்கங்கள் கொண்ட கோதண்டம் ஏந்திய கோமகன் என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். வேதாகமம் (பைபிள்) பழைய புதிய ஏற்பாடுகளை வாராவாரம் 110 அங்கங்களாக பிரசுரித்துள்ளார். இவருக்கு கிழக்கிலங்கை பத்திரிகை செய்தியாளர் சங்கம் 1992ல் கலைவாருதி என்ற பட்டம் வழங்கியது. 1995 ல் இந்துகலாசார திணைக்களத்தால் கலைமணி விருதும், 1998 ல் கலாபூஷணம்~ என்ற பட்டத்தை கலாசார அமைச்சு வழங்கியது. இவர் இராஜகுமாரன், ஈழத்தரசன், மூன்றாலங்கன்றடியான்,எழிலோன், வசந்தா, வானொலிமாமா ஆகிய புனை பெயர்களிலும் தனது படைப்புகளை வெளிக்கொண்டு வந்தவர். மட்டக்களப்பு மண்ணையும்,மக்களையும்,அதன் தேன்சுவைத் தமிழையும்,அதன் மரபுசார் விழுமியங்களையும் நேசித்து அவற்றின் முன்னெடுப்புகளுக்காக வாழ்ந்து மறைந்தவர் மட்டக்களப்பு மண்ணின் மைந்தர் இரா,பத்மநாதன் அவர்கள். அவர் புகழ் நாமம் வாழ்க .

**கோவிலூர் செல்வராஜன்**

# ஜெர்மனியில் இருந்து இணைய வழி கருத்தரங்கு

ஜெர்மனியில் இருந்து நடத்தப்படும் தமிழ் வான் அவையின் இணையவழி பன்னாட்டு இலக்கியச் சந்திப்பின் ஒருவருட பூர்த்தி நிகழ்வு ஜூன் மாதம் 27ஆம் திகதி இலங்கை நேரம் 17.30 க்கு ஐரோப்பி நேரம்14.00 மணிக்கும் நடைபெற இருக்கிறது. இந்த ஒரு வருடமும் கலந்து சிறப்புரையாற்றிய அறிஞர்கள் எல்லோரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பெருவிழாவாக இது அமையவிருக்கின்றது. சிறப்பு பேச்சாளராக இந்திய திரைப்பட




நடிகரும் சிறந்த எழுத்தாளரும் , நூலாசிரியரும், பிரபல எழுத்தாளர்களின் கதைகளை மக்களுக்கு சிறப்பாக எடுத்துச் சொல்லும் கதை சொல்லியாக எல்லோராலும் பாராட்டப் படுபடுபவருமான பவா செல்லத்துரை அவர்கள் கலந்து சிறப்பிக்கின்றார். அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**Meeting ID : 2509770769**
**Password: 246810**

# பிள்ளை கற்கிறது

அதிபர் இல்லை
ஆசிரியர் இல்லை
அதிகாரியும் இல்லை
பிள்ளை கற்கிறது......
காலைக் கூட்டம் இல்லை
கல்லூரிக் கீதம் இல்லை
சமய அனுஷ்டானம் இல்லை
நற்சிந்தனை இல்லை
உடற்பயிற்சியும் இல்லை
பிள்ளை கற்கிறது......

கலை நிகழ்ச்சி இல்லை
கண்காட்சி இல்லை
களப்பயணம் இல்லை
விளையாட்டும் இல்லை
பிள்ளை கற்கிறது......

மணியோசை இல்லை
இடைவேளை இல்லை சிற்றுண்டிச்சாலை
இல்லை
சினேகமும் இல்லை
பிள்ளை கற்கிறது......

பிரம்பு இல்லை
ஏச்சு இல்லை
குற்றம் இல்லை
தண்டனையும் இல்லை
பிள்ளை கற்கிறது......

போட்டி இல்லை
பரிசு இல்லை
பாராட்டும் இல்லை
பிள்ளை கற்கிறது......

வெற்றி இல்லை
தோல்வி இல்லை
தங்கம் இல்லை
வெள்ளி இல்லை
வெண்கலமும் இல்லை
பிள்ளை கற்கிறது......

ZOOMஇல் கற்கிறது!

-எச்-எம்-மில்ஹான்-

# இணையவழி கற்பித்தல்கள்

## -சிறு பார்வை-




இணையவழி கற்பித்தல்கள் ஓர் சிறு பார்வை இன்றைய கொவிட் -19 சூழ்நிலையில் மரபுசார் பாடசாலைக்கல்வி பாதிக்கப்பட்டிருப்பதனால் இணையவழி தளங்களின் மூலம் பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாகவும், பல்வேறு தனிப்பட்ட நபர்களினாலும் தொழினுட்ப ரீதியாக **(Zoom WhatsApp Microsoft Teams etc.)** கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான முறைமைகள் கற்றலிலிருந்து தூரமாகியுள்ள மாணவர்களை கற்றல் சூழலுக்கு அழைத்துவர காரணமாயிருந்தபோதும் எந்தளவுக்கு அனைத்து மாணவர்களையும் சென்றடைந்துள்ளது என்பது கேள்விக்குறியே! அத்துடன் இதன் பின்னணியிலுள்ள பிரச்சினைகள், இடர்பாடுகள் பற்றிய ஒரு சிறு பார்வையே இப்பத்தியின் நோக்கமாகும். கற்றல் கற்பித்தல் சூழல் எவ்வாறு அமைய வேண்டும்? என்ற வினாவுக்கப்பால் மாணவர்கள் தத்தம் சூழலிலே இணையவழியில் இணைந்துகொண்டு கற்றலில் ஈடுபடுகின்றார்கள். அத்துடன் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு இணையவசதியுடனான செல்லிடப்பேசி அதற்குரிய தரவுப்பொதிகள் போன்றவை எட்டாக்கனியே. இல்லையேல் தொடர்ச்சியாக அவற்றைப் பயன்படுத்த போதுமான வருவாய் பெற்றோரிடமிருந்து கிடைப்பதில்லை. அத்துடன் எல்லாப் பெற்றோருக்கும் தொழினுட்பரீதியான அறிவு இல்லையென்பதனால் தமது பிள்ளைகளை வழிப்படுத்தவும், அவர்களுக்கு உதவிடவும் முடிவதில்லை. இன்னொருபுறம் கட்டுக்கோப்பான, ஒழுங்குமுறைகளுடன் கூடிய, பொறுப்பு வாய்ந்த பாடசாலைச்சூழலானது மாணவர்களை கட்டாயமாக கற்கத் தூண்டுகின்றது. ஆனால் இப்போதைய இணையவழிச் சூழல் முற்றிலும் சுதந்திரமான, கவனச்சிதறல்கள் குவிந்துகிடக்கும் ஓர் தளமாகும். இந்நிலையில் மாணவர்கள் வீட்டில் கருவிகளுக்கு முன் அமர்ந்துகொண்டு முழுப் பயனையும் பெற்றுக்கொள்வதென்பது கேள்விக்குறியே! தொழினுட்ப விருத்தி காணப்பட்டபோதிலும் நாம் அதனை முழுதும் நம்பிவிட முடியாது. குறித்த இணைய வகுப்புகளுக்குரிய இணைப்புக்களை பெற்றுக்கொள்வதிலும், அவற்றை தொடர்ச்சியாக முகாமை செய்வதிலும் தொழினுட்ப கோளாறுகள் ஏற்படாமலில்லை. கைதேர்ந்தவர்கள் மூலமாகவே அத்தகைய கோளாறுகள் நிவர்த்திக்கப்பட வேண்டியுள்ளது. இது மாணவர்களின் கற்றலிலும் இடையூறுகளை ஏற்படுத்தி தாக்கம் செலுத்துகின்றது. வெளியிலிருக்கக்கூடிய இவ்வாறான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக ஆசிரியர்களும் மாணவர்களும் பல அகம் சார்ந்த பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. ஆசிரியர்களினால் நேரடி கரிசனையையும், கண்காணிப்பையும் தனித்தனியாக மாணவர்மீது காட்டமுடிவதில்லை. கற்பித்தலின் போது ஆசிரியர்கள் தங்கள் முழுத்திறமையையும், உடல்மொழியையும் பயன்படுத்த முடிவதில்லை. மாணவர்களும் ஒரே பாங்கில் தொடர்ச்சியாக கருவிகளுக்கு முன்னாலிருக்க வேண்டியுள்ளதனால் இருவரும் விரைவில் சலிப்படையக்கூடும். அத்துடன் காட்சிப்படுத்தப்படும் சிறு திரையை மாணவர்கள் நெடுநேரம் உற்றுநோக்குவதால் அவர்களது கண்கள் விரைவில் களைப்படைந்து மூளையும் சோர்வடைகின்றது. விளைவாக அவர்களுக்கு தூக்கதன்மை ஏற்படுகின்றது. மொத்தத்தில் இவ்வாறான இணையவழி கற்றல் முறைமைகளில் உயிர்ப்பான கற்றல் இடம்பெறுவதில்லை.






## Zoom, WhatsApp மூலம் கற்றல் சில உபாயங்கள்.

**Zoom, WhatsApp** மூலம் வினைதிறனும், வினைத்திறனும் மிக்க கற்றல் கற்பித்தலுக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் கடைப்பிடிக்க வேண்டியவை.

1. அதிபர்கள் ணுழழஅ கற்பித்தலுக் கான நேரசூசியைத் தயாரித்து ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்குவதோடு, குறித்த வகுப்பு மாணவர்களுக்குதினமும் 45-55 நிமிடம் கொண்ட 2:3 பாடங்கள் மட்டுமே கற்பித்தலை ஒழுங்கமைக்க வேண்டும்.

2.**Zoom** கற்பித்தலுக்கான கற்பித்தல் மாதிரிகளை குறித்த பாடஆசிரியர் பாடத்திட்டத்தைபூர்த்திசெய்யக் கூடியவாறு தயாரித்து,கற்பிப்பதை அதிபர்கள்உறுதிப் படுத்த வேண்டும்.

3 **WhatsApp** மூலம்வழங்கப்படும் செயலட்டைகள், பாடச் சுருக்கக் குறிப்புகள் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடியவாறு பாட ஆசிரியர்களால் சுயமாக தயாரிப்பதையும், வழங்கப் செயலட்டைகள் பாடசாலை ஆரம்பித்த பின் ஆசிரியரால் மதிப்பீடு செய்வதையும்அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

4.திறன்கைபேசி வசதி இல்லாத மாணவர்களுக்கு செயலட்டை,பாடச்சுருக்கக் குறிப்பு ஆகிய வற்றை பிரதி செய்து வழங்கஅதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. பெற்றோர்கள் ஒரு பாடத்தை ஒரேயொரு பிரத்தியேக ஆசிரியரிடம் மட்டுமே கற்பதை உறுதிப் படுத்த வேண்டும்.

6. திரன் கைபேசியை கற்றல் செயற்பாடுகளில் மட்டுமே பயன்படுத்துவதை பெற்றோர் உறுதி செய்ய வேண்டும்

# தேசிய பாடசாலை திட்டம் ஒரு சாபமா?

தேசிய பாடசாலைகள் அனைத்தும் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைக் கிளை மூலம் நிர்வகிக்கப்படுகிறது. பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டு பாடசாலை அபிவிருத்தித் திட்டம், வருடாந்த அமுலாக்கல் திட்டம், வருடாந்த கணக்கறிக்கை போன்றவை நேரடியாக தேசிய பாடசாலைப் பணிப்பாளரிடமிருந்து அனுமதி பெறலாம்.அதன் பிரதி வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்தால் போதும். இதனால் சில அதிபர்கள் சுற்றறிக்கையைப் புறக்கணித்து,தங்களது விருப்பப்படி திட்டங்களை தயாரித்து கல்வி அமைச்சின் அங்கீகாரத்தை பெற முடியும். இந்த வருடம் ஒரு தேசிய பாடசாலை அதிபர் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளரின் கையொப்பம் இன்றி கல்வி அமைச்சின் அனுமதியை பெற்றுள்ளார். இது போன்ற செயற்பாடுகள் காரணமாக பாடசாலை அபிவிருத்தி பெரிதும் பாதிப்படையும். இன்னும் சில தேசிய பாடசாலைகள் வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையை புறக்கணித்து கல்வி அமைச்சின் நேரடி ஆலோசனைக்கு அமைய இயங்கி வருகிறது. கல்வி அமைச்சின் மேற்பார்வையும், வலயக்கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வை இன்றியும் செயற்படமுற்படுவதால்,தேசிய பாடசாலைகளில் பல்வேறு முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினைகள் காணப்படுகின்றன என **Lakamge(2018) weeraratna(2020)Nawastheen(2018)Ilangagoon(2019)** போன்ற ஆய்வாளர்களின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தேசியபாடசாலை நிகழ்ச்சித்திட்டம் சிலதேசிய பாடசாலைகளுக்குசாபமாக அமையவாய்ப்புண்டு.இதற்கான காரணங்களில் சில..

கல்வி அமைச்சின் மேற்பார்வை நடைபெறுவதில்லை.இதனால் பாடசாலையில் முகாமைத்துவம் மற்றும் நிதி முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினைகள் அதிகரிக்கும்.இதனால் பாடசாலைகளில் அதிபர், பெற்றோர், பழைய மாணவர் மோதல் அதிகரிப்பதால்,பாடசாலைகளில் பெறுபேறுகள் குறையும்.இதற்கு சிறந்த உதாரணம் நகரில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் பெறுபேறுகள், கிராமப்புற பாடசாலைகளின் பெறுபேறுகளை விடகுறைவானஇருத்தல்.இவ்வருடம் குறிப்பாக நகரில் உள்ள பிரபலமான 4 பாடசாலைகளிலும் மூன்று பாடங்களிலும் று எடுத்த மாணவர்கள் தொகை 94 க்கும் அதிகம். ழூவலயக்கல்விப் பணிப்பாளரினால் பாடசாலை முகாமைத்துவத்தில் தலையீடு செய்ய முடியாமையினால்,அதிபர்கள் தான்தோன்றித்தனமாக முகாமைத்துவம் செய்வதால் பாடசாலை சீரழிகின்றமை மனவருத்தமாகவுள்ளது. ழூகிராமப்புற பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்து,தேசிய பாடசாலைகளில் அனுமதி பெற்ற மாணவர்கள் மூலமே சிறந்த பெறுபேறுகளை தேசிய பாடசாலைகள் பெறுகின்றன.இம்மாணவர்கள் சொந்த ஊரில் படித்தால் தேசிய பாடசாலைகளுக்கு இணையாக சொந்த ஊர் பாடசாலை அபிவிருத்தி அடையும்.அதேவேளை தேசிய பாடசாலை பிரபல்யம் குறைந்து விடும். [illegible]க்கும் தேசிய பாடசாலை நோக்கி படையெடுப்பு குறைந்து விடும். 2023க்குப் பின்னர் பல்கலைக்கழக அனுமதியில் மாவட்டூகஷ்டப பிரதேச ஒதுக்கீடு 55ழூஇல் 70ழூகிராமப்புற பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் ,30ழூ தேசிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. இதனால் தேசிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களு க்கு பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொள்வது கஷ்டமாக இருக்கும்.

தேசிய பாடசாலைகளில் அதிபர் நியமனம், இடமாற்றம் ஆகியன அரசியல் தலையீடு காரணமாக ஆளுமை மற்றும் சிறந்த அதிபர் நியமிப்பதில் சிரமம் ஏற்படும்.இதனால் ஆளுமை இல்லாத அரசியல் வாதிகளின் அடிவருடிகள் தற்காலிக அதிபராக கடமை புரிய நேரிடும்.இதனால் பாடசாலைகளின் கல்வி தராதரம் குறைந்து செல்லும்.உதாரணமாக நகரில் உள்ள தேசிய பாடசாலைகளில் அனேகமானவை கடந்த 10 வருடங்களாக நிரந்தர அதிபர்கள் இன்றி தற்காலிக அதிபர்களால் நடத்தப்படுகின்றன.இதனால் இப்பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு, பாடசாலை படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருகின்றன. ழூதேசிய பாடசாலைகளில் நடைபெறும் ஊழல் பற்றி சுட்டிக் காட்டினால்,சில தேசிய பாடசாலைஅதிபர்கள் பிள்ளைகளை பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுதல்.இப்பிரச்சினை மாகாணப் பாடசாலைகளில் குறைவு.ழூஇவை போல பல்வேறு சாபங்கள்....எனினும் இவை போன்ற சாபங்களிலிருந்து தேசிய பாடசாலைகளைப் பாதுகாக்க ஊழல் மற்றும் குறைபாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். **Senior Asst. SecretaryDiciplinary and Investigation Branch Minister of EducationISURUPAYABattaramulla.**

வாய்ப்புக்காக
காத்திருக்காதே....
உனக்கான
வாய்ப்பை நீயே
ஏற்படுத்தி கொள்



# கிழக்கில் வளர்ந்து வரும் பன்முக ஆளுமை

# அடியவன் கவி பிரமீன்.





கல்முனையை சேர்ந்த விக்னேஸ்வரன் பிரமீன் தனது ஆரம்பக்கல்வியை விவேகனந்தா தமிழ் வித்தியாலயத்திலும் உயர்கல்வியை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் பயின்றார். இவருக்கு குடும்ப சூழலாலும் அவரது அம்மா தேவாரம் பஜனை மற்றும் கிராமிய தெய்வ பாடல்கள் பாடுவதாலும் கலை மீது ஈர்ப்பு உண்டாகியது. இசை மீதான காதலால் நுண்கலைமானி பட்டப்படிப்பை **( BA music)** இந்தியாவின் திருச்சி கலைக்காவேரி நுண்கலை கல்லூரியில் நிறைவு செய்து பின் முதுமானி **(M.A music).** பட்டமும் முடித்து தற்போது ஆ.்டை அரளஉை படித்து வருகிறார். இதைவிட யோகா பட்டமும் முடித்து உளவியல் பட்டமும் முடித்துள்ளார். கலையினூடும் சமயத்தினூடும் நல் மனிதனை உருவாக்கும் நம்பிக்கையோடு பயணிக்கும் இவர் தற்போது நிந்தவூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றுவதுடன் இரு ஆலயங்களின் பிரதம குருவாகவும் சமயப் பணியாற்றி வருகிறார். யுவஸ்ரீ கலாபாரதி, சிவஸ்ரீ அடியவன் க.வி. அகத்தியன் ஆகிய புனைப்பெயர்களில் இசைத்துறையில் பயணிக்கும் இவர் இதுவரையில்ராஜ கலைஞன், யுவஸ்ரீகலா பாரதி,திருவள்ளுவர் விருது இசைத்தமிழோன்,கலைசுடர், தமிழ்மறைஇஅடியேன்



ஆகிய விருதுகளையும் பதஞ்சலி கின்னஸ் சான்றிதழையும் பெற்றுள்ள ஓர் கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு வயது முதலே நாட்டுக்கூத்து, பஜனை, தமிழ்த்தின போட்டிகள், கலாசார போட்டிகள் என கலைத்துறைசார் அனைத்து போட்டிகளிலும் பங்கேற்று தன்னை வளப்படுத்தியவர். பின்னாளில்பத்தி பாடல் , கீதம் கீர்த்தனை , பதம், வர்ணம், கௌத்துவம், காவடிச்சிந்து, தில்லானா, சப்தம். நாட்டிய நாடகம். இப்படி பல கலை வடிவங்களை எழுதி இசையும் அமைத்துள்ளார். அத்தோடு டோலக், மிருதங்கம், உடு கஞ்ரிரா, மோர்சிங், டோல்கி, தபேலா போன்ற பல இசைக்கருவிகளை இசைக்கும் ஆற்றலும் இவரிடம் உண்டு.

கண்ணகி வழிபாட்டு ஆய்வாளர் தொன்மமான ஏடுகளின் ஆய்வாளர் மற்றும் மரபு சார் பண்பாட்டு சிந்தனையாளராகவும் ஆலய கதாப்பிரசங்க சொற்பொழிவு பயிற்றுவிப்பாளராவும் பயணிக்கும் இவர் இதுவரை நானூறுக்கு மேற்பட்ட ஆலயங்களில் சமய சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அத்தோடு அம்பாரை மாவட்ட சிவநெறி அறப்பணி மன்ற ஒருங்கிணைப்பாளராககவும், இந்து நாகரிகம் மற்றும் தர்மாசிரியர் பரீட்சை பயிற்றுவிப்பாளராகவும், பிரதேச கலாசார மத்திய நிலைய ஆசிரியராகவும் சமயப் பணியில் தன்னை அர்ப்பணித்து வரும் கல்முனையின் ஓர் பன்முகத் திறமையாளர் விக்னேஸ்வரன் பிரமீன் அவர்களது கலைப் பயணம் ஓய்வின்றி தொடரவும் அவரது கனவாக இருக்கும் மனிதம் மலர்ந்த அமைதியான நல் ஆன்மீக உலகு நிலைக்கவும் கல்முனை நெற்றின் வாழ்த்துக்கள்.

# இலக்கிய வானில் சிறகடிக்கும்

# வானம்பாடி முஜா

இளம் கலைஞர் அறிமுகம்

கு.கிலசன்



நிந்தவூரில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த வானம்பாடி முஜா ஆரம்பம் முதல் உயர்தரம் வரையில் நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்ற காலங்களிலேயே பாடசாலை கோட்ட மாகாண மட்டங்களில் தமிழ்த் தினப் போட்டிகள் மீலாதுன் நபி விழா, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கவிதை, கட்டுரை, சிறுகதையென இலக்கிய பயணத்தை ஆரம்பித்தவர். ஆயினும் திருமணத்தின் பின்னர் இலக்கியம் மீதான ஆர்வம் இயல்பாகவே குறைந்தது.

2008ல் கணவரின் அனுமதியுடன் மீண்டும் முகம் காட்டாமல் தன் படைப்புக்களை வாசகர்களுக்கு விருந்தாக்கினார். ஊர்க்குருவி, வானம்பாடி எனும் புனைப்பெயர்களில் தனது அடையாளத்தை உருவாக்கிக் கொண்ட இவரது ஆக்கங்கள் முகநூலில் பெரும் வரவேற்பை பெற்றன. பிறை, சக்தி பண்பலை, கெபிடல் பண்பலை போன்ற வானொலிகளிலும் இவரது கவிதைகள் சிறகடிக்க ஆரம்பித்தன. தனது கவிதைகளில்சமூக ஒழுக்கம், சமூக அவலங்கள், மற்றும் உணர்வுகளையும் அனுபவப் பகிர்வாய் எழுத்துக்களால் வண்ணம் சேர்ப்பவர். இவருக்கு கிழக்கிலங்கை இளைஞர்கள் அமைப்பினால் சிறந்த ஆளுமை மற்றும் சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் வளரி, பன்னாட்டு கலைஞர் சங்கத்தின் அமைப்பாறை மாவட்ட பிராந்திய இணைப்பாளராகவும், கடற் பறவைகள் இலக்கிய அமைப்பின் பொருளாளராகவும், நிறைமதி கலை இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் இலக்கிய பங்காற்றுகிறார்.

இதைவிடதூரிகைக்காதல் **www. thoorigaikadhal.com** எனும் தனது சொந்த வலையத்தளத்தினூடாக நீங்களும் எழுதலாமெனும்பகுதியினூடாக சக படைப்பாளிகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளார். உடைந்த கப்பல், தங்க நாணயங்கள் போன்ற கவிதைத் தொகுப்புக்களிலும், நிந்தபதி எனும் இலக்கிய தொகுப்பிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இவரது கன்னிக் கவிதை நூலை வெளியிட முயற்சித்தும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் இதுவரை முடியாமல் போயுள்ளது. நிலமை சீரானதும் தனது முதல் படைப்பை வெளியிடும் ஆவலோடு பயணிக்கும் வானம்பாடி முஜாவிற்கு அவரது இலக்கிய பயணம் சிறகு விரித்து பறக்க எமது நல்வாழ்த்துகள்.





# பட்டுச் சேலைகள் ஏன் வேண்டும்?



**க.மங்களேஸ்வரி
திருகோணமலை**

தற்காலத்துப் பெண்கள் திருமணம் என்றவுடன், வெளிநாட்டு மோகத்தின் காரணமாகவும், பகட்டிற்காகவும் , புகைப்படத்திற்காகவும், தான் அழகாகன மணப் பெண்ணாக ஏனையோர் மத்தியில் தென்பட வேண்டும் என்பதற்காகவும், பட்டு சேலை அணிவதை விட பாட்டி ஃரக்தான் சிறந்த திருமண ஆடை என்று எண்ணி அதனை அணிந்துதான் மண மேடைக்கே செல்கிறார்கள். இது தான் இன்றைய கால பெண்களின் அறியாமையின் நிலை. நவீன வளர்ச்சியானது இருப்பதையும் அழித்து விட்டது.

ஆனால் பட்டுத் துணியிலும் ஒரு அறிவியலை வைத்துச் சென்றிருக்கின்றனர் எமது முன்னோர்கள். பட்டுத் துணிக்கு சில இயற்கையான குணங்களுண்டு. நல்ல கதிர்களை எளிதில் தக்க வைத்துக் கொள்கின்ற ஆற்றல் பட்டுத் துணிகளுக்கு உள்ளது. அதே போல் நோயாளிகளினுடைய சுவாசம், ஓசோன் படையிலிருந்து வரக் கூடிய சில தீய கதிர்கள் போன்றவற்றைத் தடுத்து உடலுக்கும், உள்ளத்திற்கும் வலிமையளிக்கும் சக்தி பட்டுச் சேலைக்களுக்கு உள்ளது.

அதே போல் திருமணத்தில் மணப் பெண்ணுக்கும், மணமகனுக்கும் பட்டுத் துணி அணிவிப்பதன் காரணம். திருமணத்தின் போது பலதரப்பட்டோர் வருகை தருவார்கள். அதில் யார் எப்படிப்பட்டவர்கள்? எவ்விதமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியாது. அதனால் மணமகனும், மணமகளும் பட்டுத் துணி அணிவதனால் எவ்வித தொற்று நோய்களும் தொற்றாமல் இன்பமாக வாழவே பட்டுத் துணி அணிந்தார்கள். திருமணப் பெண்களுக்கு நகைகளும், பட்டுப் புடவைகளும் உடலியல் காரணங்களுக்காகவே அணிவிக்கப்பட்டன. தங்கம் உடலிற்கு நேரான சக்தியைக் கொடுக்கக் கூடியது. இது உடலிலுள்ள நரம்புகள், இதயம் போன்ற இடங்களில் படும் போது இரத்த ஓட்டம் சீராகும். கோயிலுக்குச் செல்லும் போது கூட பட்டு என்று நமது பாட்டிமார்கள் கூறுவார்கள். அதற்கும் ஒரு காரணமுண்டு. கோயிலில் இருக்கக் கூடிய நல்ல கதிர்களை தன்னகத்தே தக்க வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் இவைகளுக்கு உண்டு என்பதனாலேயாகும்.

மங்கையர் மகுடம்
ஜெனிதா மோகன்

# புலத்தில் இன்பத் தமிழை பாதுகாக்கும் குறிக்கோளுடையவர்

**திருமதி-பவானி சற்குணசெல்வம்**

திருமதி. பவானி சற்குணசெல்வம்
நெதர்லாந்து



இவர் பதுளையில் பிறந்தவர் தனது ஆரம்பக் கல்வியை பதுளை கன்னியாஸ்திரியர் பாடசாலையில் பெற்று பின் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்விகற்றவர். பின் யாழ்ப்பாணத்தில் உயர்தரக் கல்வியை மேற்கொண்டு. இலங்கைக் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தில் கலைமானிப்பட்டம் பெற்று அங்கு விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்

திருமணத்திற்கு பின்னர் நெதர்லாந்திற்கு புலம்பெயர்ந்து டச்சு மொழியை திறம்பட கற்றார். மேலும் உளவியல் மற்றும் சட்டத்துறையில் கல்வி கற்று பட்டம் பெற்றார். இவர் நெதர்லாந்தில் அரச நிறுவனங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பணியாற்றியவர். பின் அகதிகளுக்கான உதவிக்காரியாலயத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

தமிழில் மட்டுமன்றி டச்சு மொழியிலும் சிறப்பான திறமைகளை கொண்ட பவானி அவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் சிறுவர்களின் தமிழ் வளர்ச்சியில் அயராது பாடுபட்டவர். தமிழ் பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றி மாணவர்களின் நல்லபிப்பிராயத்தை பெற்றவர். தமிழ் மாணவர்களுக்கு நாடகம், நாட்டியம், இசை போன்றவற்றை பயிற்றுவித்து அவர்களை முன்னேற்றியவர். புலம்பெயர்ந்த மக்கள் தமிழையும் சமயத்தையும் இரு கண்களை போல பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டவர். இவர் சேரனின் கவிதைகளை மொழிபெயர்த்து கடலின்கதை எனும் நூலை தமிழ் மற்றும் நெதர்லாந்து ஆகிய இருமொழிகளில் வெளியிட்டார். சேரனின் காதல் கவிதைகள் தொகுப்பு அன்பு திகட்டாது எனும் நூலானது நெதர்லாந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. சிலகணங்கள் எனும் இளையோர்க்கான கவிதைத் தொகுப்பு வெளியிட்டுள்ளார். மனச்சோலை என்ற 26 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூலை வெளியிட்டுள்ளார். சாதி ,மத, இன, அரசியல் வேறுபாடற்ற சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்பதே இவர் சமூகத்திற்கு சொல்லும் வாசகமாக உள்ளது.

# படம் வரைவோம்





# நேரத்தை பயனுள்ளதாக்குவோம்





சிறுவர்களே இன்றைய காலகட்டத்தில் எமது முழு நேரமும் வீட்டிலேயே கழிகின்றது.அதில் எமது பாட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களை பயனுள்ளதாக மாற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் ஒவ்வொருவரும் முத்திரைகளை சேகரித்தல், நாடுகளின் சின்னங்கள், அவற்றின் வர்ணங்கள், கலாச்சாரம், வரலாறு, புராதன பெயர்களை தேடி அவற்றை அறிந்து கொள்ளுதல் மற்றும் பூந்தோட்டம் அமைத்தல், சிறு சிறு கைவினைப் பொருட்கள் செய்தல், அழகான சித்திரங்களை வரைதல், போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது சிறுவர்களின் திறன்களை யும், நினைவாற்றலையும், பொது அறிவு தொடர்பான அறிவினை விருத்தி செய்வதற்கும், சிந்தனை ஆற்றலை தூண்டுவதற்கு ம் உதவுகின்றது . இதனால் குழந்தைகளே உங்களுக்குள் உற்சாகமும், மனமகிழ்ச்சி யும்,அறிவு விருத்தியும் ஏற்படும் எனவே உங்கள் நேரத்தை இவ்வாறான பயனுள்ள வகையில் செயற்படுத்தி பயனடையுங்கள்.

கன்று
கி.அருள்மலர்






Kindergarten Reading: Animals

This is a tiger. It is a large animal. It likes to hunt for its food. They are carnivores.

Tigers have four legs and a tail. They are orange with black stripes. It is the biggest cat in the world.

# ஹெட்போன் அதிக நேரம் உபயோகிப்போருக்கான விழிப்புணர்வு பதிவு!!!



நாம் ஹெட்போன் பயன்படுத்துவதினால் நம் காதுகளில் உள்ள செல்களின் மீது மிகவும் தவறான தாக்கத்தை எதிர் கொள்கிறோம். ஹெட்போன அதிகநேரம் வரை நாம் உபயோகிப்பதால் நம் காதுகளில் உள்ள செல்கள் சிதைகின்றன. அதே போல வேகமாக பாக்டீரியா தொற்றுகள் ஏற்படுகின்றன...

இன்றைய உலகில் பெரும்பாலும் ஹெட்போன் உபயோகிப்போரின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது.

அதேபோல மார்க்கெட்டிலும் அதிகமான நிறுவனங்களும் ஹெட் போன்களை விற்பனைக்கு கொண்டுவந்துள்ளது, தங்களின் பொழுதுபோக்கிற்காக விளையாட்டாக பயன்படுத்தும் ஹெட் போன்களினால் எவ்வளவு பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை யாரும் உணர்வதில்லை நாளடைவில் தான் அதன் பாதிப்பை உணர்கின்றனர்.

நமது காதுகளால் 65 டெசிபெல் வரை ஒரு ஒலியை தாங்க முடிகிறது, ஆனால் நாம் பயன்படுத்தும் ஹெட் போனின் ஒலி குறைந்தது 100 டெசிபெல் ஆகும். அதாவது 100 டெசிபெல் தொடர்ச்சியாக 10 மணி நேரத்திற்கு மேல் நாம் ஹெட் போனில் ஒலியை கேட்டால், நாம் காது கேளாத நிலையை அடைந்துவிடும்.

தொடர்ந்து ஹெட்போன் கேட்பதால் சிந்திக்கும் திறன், ஞாபக சக்தி குறையும். ஹெட்போனுக்கு அடிமையானவர்களுக்கு ஆடிட்டரி ஹாலுசினேஷன் என்ற மனநோய் வரும். இதனால் அவர்களுக்கு ஹெட்போனை கழற்றிய பிறகும் பாடல்கள் ஒலிப்பது போலவும், யாராவது பேசுவது போலவும் இருக்கும்.

ஹெட்போன் பயன்படுத்துவதினால் தலைவலி, தூக்கமின்மை, மற்றும் மன அழுத்தம் போன்றவற்றினாலும் நாம் பாதிப்படைகின்றோம், நீங்கள் இது போன்ற பிரச்சனைகளை சந்திக்கிறீர்கள் என்றால் ஹெட் போன் பயன்பாட்டை தவிர்த்துக்கொள்ளுங்கள்!!!!

# ஆரோக்கியம் தரும் மூச்சுப் பயிற்சிகள்.



உயிர்கள் உலகில் வாழ காற்று அவசியமாகிறது. நாங்கள் தினமும் சுவாசிக்கின்றோம் சுவாசம் நின்றால் உயிரும் பிரிந்துவிடும். மனிதன் ஒருவன் ஒரு நாளைக்கு 21,600 தடவைகள் சுவாசிப்பதாக யோகிகள் கணக்கிட்டு சொல்லியிருக்கின்றார்கள். சுவாசிக்கா விட்டால் எம்மால் உயிர்வாழ முடியாது என்பது எல்லோரும் அறிந்த விடயம். ,ருந்த பொழுதிலும் நாம் சுவாசிப்பதில் கூடிய கவனம் செலுத்துவதில்லை. ,றைவன் எமக்கு இரண்டு சுவாசப்பை களை பெரிதாக கொடுத்த போதிலும் நாம் அதனைக் குறைவாகவே பயன்படுத்துகிறோம்.நாம் முறைப்படி சுவாசித்தால் சுவாசப் பையோடு சம்பந்தப்பட்ட அஸ்மா போன்ற நோய்களின்று விடுபடுவதோடு பல்வேறு நோய்களில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமாக வாழலாம். இதற்காக சில மூச்சுப் பயிற்சிகளை செய்து வந்தாலே போதுமானது. இக்காலகட்டத்தில் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களில் ,ருந்து எம்மை காப்பாற்றக்கூடிய மூச்சுப் பயிற்சிகள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

தற்போதைய காலகட்டத்தில் கொராணா வைரஸ் பரவிக் கொண்டிருப்பதனால் மிக அவதானமாகவே நாம் சுவாசப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

எந்த ஒரு பயிற்சி செய்யும் பொழுதும் இறைவனை வேண்டி குருவை மனதில் நினைத்து நான் செய்யப் போகும் ,ந்த பயிற்சிகளின் முழு பயனையும் பெற அருளுவாயாக என்று மனதில் பல தடவைகள் நினைத்துப் பிரார்த்திக்கவும். பின்பு பயிற்சிகளை செய்யும் போது ,றையின் அருளும் குருவின் அருட் கடாட்சமும் கிடைப்பதனூடாக நாம் முழுமையான பயனைப் பெறலாம்.

முதலில் இளம் சூடான தண்ணீரில் மூக்குத் துவாரங்கள் இரண்டையும் சுத்தம் செய்து துடைத்துக் கொள்க.

## பயிற்சி 1.

வலது கைப் பெருவிரலால் வலது மூக்குத் துவாரத்தை மூடிக்கொண்டு இடது பக்க மூக்குத் துவாரத்தினால் காற்றை வேகமாக வெளியே அனுப்புக. பின்பு இடது மூக்குத் துவாரத்தை வலது கை மோதிர விரலால் மூடிக் கொண்டு வலது மூக்குத் துவாரத்தால் காற்றை வேகமாக வெளியே அனுப்புக இரண்டு மூக்குத் துவாரங்களிலும் காற்றை வெளிவிடும்போது மூக்கை சிந்துவது போல் செய்க. இரண்டு மூக்குத் துவாரங்களாலும் மாறி மாறி செய்யவும். பத்திலிருந்து பதினைந்து தடவைகள் செய்தால் போதுமானது. ,வ்வாறு செய்யும் போது சளித்துகள்கள் வெளியில் பறக்கலாம். இது முன்னால் இருப்பவர்களுக்கு ,டையூறை விளைவிக்கும் என்பதனால் எமக்கு முன்னால் எவரும் நிற்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ,ப்பயிற்சியை ஒரு ஒதுக்குப்புறத்தில் நின்று கொண்டும் செய்யலாம். பயிற்சியின் பின் சுத்தமான கைக்குட்டையால் மூக்குத்துவாரத்தை துடைத்துக்கொள்க.

தொடரும்....

# உடலுறவும் பாதுகாப்பும்



உடலுறவுக்கு பிறகு உள்ளாடைகளை பயன்படுத்தலாமா என்று கேள்வி பலருக்கும் எழலாம். அதே உள்ளாடைகளை பயன்படுத்தும் போது பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாக நேரிடும். உடலுறவுக்கு பின் பேணிக்காக்க வேண்டிய சுகாதார நன்மைகளை குறித்த கட்டுரைகள் தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள். பாதுகாப்பான உடலுறவு கடைபிடிக்காவிட்டால் பல்வேறு நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

உடலுறவுக்கு பின் நீங்கள் பேணிக்காக்க வேண்டிய பல குறிப்புகள் உள்ளன. குறிப்பாக பெண்கள் பல சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ,ந்த கட்டுரையில் நீங்கள் செய்ய வேண்டியவை பற்றிய விளக்கங்களும் ஆலோசனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பாலியல் நன்மைகள் மற்றும் சுகாதாரம் குறித்து பல்வேறு விஷயங்களை நிபுணர்கள் நமக்கு கூறுகின்றனர். அதில் முக்கியமான ஒன்று சிறுநீர் பாதை தொற்று. உடலுறவுக்குப்பின் உடலுறவுக்கு பின் சிறுநீர் கழிப்பது சிறுநீர் பாதை தொற்று நோயிலிருந்து நம்மை பாதுகாக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அதே சமயத்தில் பிறப்புறுப்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உடலுறவுக்கு பிறகு செய்ய வேண்டிய வேறு ஏதாவது விஷயங்கள் உள்ளனவா என்று தெரிந்து கொள்வோம். நீங்கள் உடலுறவுக்குப் பின் உங்களது உள்ளாடைகளை நீக்கிவிட வேண்டும். ,தைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் ,து போன்ற சின்ன சின்ன உதவிக் குறிப்புகள் உங்களுக்கு உதவக்கூடும்.

## நோய்த்தொற்றுகள்

உடலுறவுக்குப் பிறகு உள்ளாடைகளை உடுத்திக் கொள்வதை தவிர்த்து விடுங்கள். எதையும் அணியக்கூடாது என்று அர்த்தமில்லை உங்களுக்கு வசதியாக ,ருக்கும் உள்ளாடைகளை அணிந்து கொள்ளலாம். உங்கள் யோனி பகுதிக்கு காற்றோட்டமாக இருக்கும் படி உள்ளாடைகளை தேர்ந்தெடுங்கள். உடலுறவில் ஈடுபடும் போது யோனியும் சில பணிகளை செய்கிறது. எனவே அதற்கான காற்றோட்டத்தையும் நாம் கொடுக்க வேண்டும். ,து நமைச்சல் போன்ற தொற்று நோய்களை தடுக்க உதவும். சில நேரங்களில் உள்ளாடைகளில் இருக்கும் ஈரப்பதம் மோசமான பாக்டீரியாவின் உற்பத்திக்கு வழி வகை செய்கிறது. ஈஸ்ட் போன்ற நோய்த் தொற்றுகள் ஏற்படாமல் தடுக்க உள்ளாடைகளை உடனே மாற்றுவது சிறந்தது.

## உடலுறவுக்கு பின் சிறுநீர் கழித்தல்

உடலுறவுக்குப் பின் சிறுநீர் கழிப்பது என்பது நம்மில் பெரும்பாலானோர் செய்வதில் ஒன்று. ,ருப்பினும் ,தை நினைவில் வைத்துக் கொள்வது அவசியம். சிறுநீரக தொற்றுக்களை தடுக்க, சிறுநீர்பை நிரம்பவில்லை என்றாலும், உடலுறவுக்குப் பின் சிறுநீர் கழிப்பது அவசியம். யோனியில் உள்ள பாக்டீரியாக்கள் உடல் உறவுக்கு பிறகு சிறுநீர் குழாயில் சேமிக்கப்படுவதால் தொற்று ஏற்படுகிறது. ஒருவேளை சிறுநீர் நோய் தொற்று சரி செய்யப்பட்டாலும், அதனால் ஏற்படும் அறிகுறிகள் எளிதில் குணமடையாது.

## ஈரப்பதம்

உடல் உறவின் போது அதிக ஈரப்பதம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். விந்து, வியர்வை, யோனி திரவங்கள் போன்றவை உடலுறவின் போது ஏற்படுகிறது. உடலுறவுக்குப் பிறகு உங்கள் யோனி பகுதியை ஈரமில்லாமல் வைத்துக்கொள்வது அவசியம். உடலுறவுக்கு பின் ஒரு திசு அல்லது சுத்தமான துணி கொண்டு உங்கள் யோனி பகுதியை நன்றாக துடைத்துக் கொள்ளுங்கள். ஈரப்பதம் காரணமாக பாக்டீரியா தங்கிவிடுவதால், இது கவனிக்கப்பட விட்டால் பாக்டீரியா தொற்று நோய்களுக்கு ஆளாக நேரிடும். மேலும் அதிக மணம் உள்ள சோப்புகளை யோனி பகுதியில் பயன்படுத்தக்கூடாது.

## மருத்துவ ஆலோசனை

உங்கள் யோனி பகுதியில் வித்தியாசமான மாற்றங்கள் எதையாவது நீங்கள் உணர்ந்தால் உடனடியாக உங்களது மருத்துவரை சந்திக்க வேண்டும். உடலுறவுக்குப் பிறகு உங்களுக்கு ஏதேனும் அசவுகரியம் அல்லது வலி, அரிப்பு போன்ற பிரச்சனைகள் இருந்தால் மகளிர் மருத்துவரிடம் சென்று ஆலோசனை மேற்கொள் ளலாம். பாதுகாப்பான உடலுறவு கடைபிடிக்காவிட்டால் பால்வினை தொற்று நோய்கள் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

# முடக்க நிலையிலும் இணைய வெளியில் மகிழ்ச்சி தரும் பாடல்கள் பதிவிறக்கம்

## பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் தினா "கல்முனை நெற்றுக்கு" தெரிவிப்பு



—கிரிஷாந்—

உலகளாவிய முடக்கு நிலையில் அதிகளவிலான பாடல்கள் இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்படுவது வரவேற்கத்தக்க விடயம் என்று பிரபல இந்திய இசையமைப்பாளரும் தென்னிந்திய திரை இசை கலைஞர்கள் சங்கத்தின் தலைவருமான தினா தெரிவித்தார்.

கல்முனை நெற் ஊடக வலையமைப்புக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மிடில் கிளாஸ் மாதவன் இவரது கைவண்ணத்தில் உருவான இசை காரணமாக இந்திய நாடகங்கள் வெற்றி பெற்றுள்ளன என்றால் அது மிகையாகாது தமிழ் திரைப்படத்தின் மூலம் தினா உலகப் புகழ் பெற்றார் இதனையடுத்து திருடா திருடி திரைப்படத்தின் மூலம் இவரது புகழை உலக அளவில் மேலும் பரவ தொடங்கியது.திருடா திருடி திரைப்படத்தில் மன்மத ராசா பாடல் அவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது என்றால் அது மிகையாகாது.

பல முன்னணி நடிகர்கள் நடித்துள்ள திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை நெற் ஊடகத்திற்கு இவர் கருத்து வழங்குகையில்...

உலகளாவிய ஊடக நிலையில் அனேகமானோர் தமது திறமைகளை வீட்டிலிருந்தவாறே வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக இசை மீது ஆர்வம் கொண்டவர்கள் தமது இசை பாடல்களை இணையதளத்தில் வெளியிட்டு வருகின்றனர். வீட்டில் இருக்கும் போது நல்ல நேரம் கிடைக்கும் இது நல்ல விடயம். இந்த பதிவுகளை பார்வையிடும்போது மகிழ்ச்சி அளிக்கிறது மேலும் ஆச்சரியமடைந்தேன். ஒவ்வொரு இசை ரசிகர்கள் மத்தியிலும் இவ்வளவு திறமை இருப்பதை அறிந்து கொண்டேன். இந்த உலகளாவிய முடக்க நிலையில் பல இசையமைப்பாளர்கள் உருவாகி உள்ளனர். முடக்க நிலை முடிவடைந்தது இசைக்கு இவ்வாறு நேரம் ஒதுக்கப்படுமா?என்பது சந்தேகம் எனினும் பலர் நேரத்தை வீணடிக்காமல் இசை வெளியிட்டுள்ளனர். இலங்கை மக்கள் வைரஸ்லிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் வைரைஸை விரட்டி புதிய யுகத்தை ஏற்படுத்த வேண்டும். கல்முனை நெற்றுக்கும் இரசிகர்களுக்கும் நன்றிகள்...

# கல்முனை கரையோர அபிவிருத்தியில் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிப்பு

கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தி திட்டத்தில் தமிழ்ப்பிரதேசங்கள் முற்றாக புறக்கணிப்பட்டுவருகிறது. அது தொடர்பாக இடம்பெற்ற திட்டமிடல் கூட்டத்திற்கு தமிழ் பிரதேசசெயலாளர் மற்றும் மாநகரசபை தமிழ்உறுப்பினர்களுக்கு எவ்விதஅழைப்பும் விடுக்கப்படாமல் கதவடைப்பு இடம்பெற்றுள்ளது. மாநகரஅபிவிருத்தியில் இனரீதியான பாகுபாடு தொடர்கிறது.

கல்முனை மாநகரசபைஎல்லைக்குள் தமிழ்ப்பிரதேசங்கள் இல்லையா? தமிழர்கள் இல்லையா? என கல்முனைமாநகரசபை வாழ் தமிழர்கள் கேள்வியெழுப்புகின்றனர். கல்முனை மாநகரசபைக்குட்பட்ட சாய்ந்தமருது தொடக்கம் பெரியநீலாவணை வரை கடற்கரை சூழலை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கல்முனை மாநகரசபை மேயரின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தலைமையில் இடம்பெற்றுள்ளது.இதில் மாநகரசபை மேயர் மற்றும் அதிகாரிகள் கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் உட்பட பலர் அழைக்கப்பட்டு நடைபெற்றுள்ளது.

கல்முனை மாநகர கரையோர அபிவிருத்தி திட்டமிடல் குழுவின் இக்கலந்துரையாடல் தொடர்பாக மாநகரசபையின் தமிழ் உறுப்பினர்களுக்கோ கல்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கோ எந்த அறிவித்தலும் வழங்கப்படாமலும் அழைக்கபடாமலும் நடைபெற்றுள்ளது. குறித்த திட்டம் தொடர்பில் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திலும் மாநகரசபையிலும் இருவேறு கூட்டங்கள் நடந்துள்ளன. இக்கூட்டங்களுக்கு தமிழர் பிரிதிநிதிகள் அழைக்கப்படாமை தொடர்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர்களும் விசனம் தெரிவித்துள்ளனர். கல்முனை மாநகரசபைக்குட்பட்ட கடற்கரை பகுதிகள் எனும்போது சாய்ந்தமருது கல்முனைக்குடி மருதமுனை



ஆகிய மூன்று முஸ்லிம் கிராமங்களும் கல்முனை பாண்டிருப்பு பெரியநீலாவணை ஆகிய மூன்று தமிழ் கிராமங்களும் உள்ளன. ஆனால் தமிழ் தரப்புக்கு இது தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை. கல்முனை மாநகர சபை என்பது தனியாக முஸ்லிம்களுக்கு மட்டுமானது அல்ல. கல்முனை மாநகர மேயரினதும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீசினதும் செயற்பாடு தமிழர்களை புறக்கணிப்பதாகவும் இனவாதமாக செயற்பட்டு வங்குரோத்து அரசியல் செய்வதாகவுமே தொடர்கிறது. கல்முனை நகரஅபிவிருத்திட்டம் கொண்டுவரப்பட்டபோதும் வேண்டுமென்றே தமிழ்பிரதிநிதிகளை அழைக்காமல் அத்தனை கூட்டங்களையும் திரைமறைவில் நடாத்தினார்கள். தமிழர்பகுதிக்குள் உள்ள இஸ்லாமாபாத் கல்முனைக்குடி மற்றும் மருதமுனை பகுதிகளில் கார்ப்பட் வீதி போடப்பட்டுள்ளது. ஆனால் அருகிலுள்ள தமிழ்க்கிராமங்களுக்கு அது மறுக்கப்பட்டுள்ளது. இன்றும் யாரும் அதனை நேரடியாகக்காணலாம். மாநகரசபைக்குட்பட்ட வாசிகசாலைகளில் மருதமுனையில் புனரமைப்பு நடக்கிறது .ஆனால் பாண்டிருப்பு பெரியநீலாவணை கல்முனை தமிழ்ப்பகுதிகளில் உள்ள நூலகங்கள் எவ்வித புனரமைப்போ அபிவிருத்தியோ இல்லாமல் பாழடைந்து அப்படியே காணப்படுகின்றது.

மலசலக்கூட கழிவுகளை கொண்டுவந்து முன்னாள்அமைச்சர் மன்சூர் கட்டிய நூலகத்திற்கு பின்னாலுள்ள தமிழர்பகுதிகளுக்குள் கொட்டுவது இஸ்லாமாத் மலசலக்கூடகழிவுகளை கல்முனை பன்சலமுன்பாகவுள்ள வடிகானுக்குள் விடுவது தொடக்கம் பெரியநீலாவணை தோணாக்களை திட்டமிட்டு நிரப்புவது வரை தொடர்ச்சியாக பாரபட்சங்கள் ஆக்கிரமிப்புகள் இனரீதியாக தொடர்கின்றன. இத்திட்டத்தினுள் சாய்ந்தமருது கடற்கரைப்பூங்கா கல்முனை பூங்கா மருதமுனை கடற்கரைப்பூங்கா ஆகிய இடங்கள் புனரமைப்புச்செய்யப்படவிருக்கின்றதாம். அப்படியெனின் கல்முனை பாண்டிருப்பு பெரியநீலாவணை போன்ற தமிழ்ப்பிரதேசங்களில் கடற்கரைப்பூங்காக்கள் இல்லையா? அல்லது கடற்கரையே இல்லையா? ஏனிந்த பாரபட்சம்?

கல்முனை மாநகர சபை என்பது அனைத்து இனங்களுக்கம் பொதுவானது. தங்கள் அதிகாரங்களை வைத்து பக்கச்சார்பாக செயற்படுவதாயின் கல்முனை மாகரசபையை பிரித்து கல்முனை வடக்கு நகர சபை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுக்கின்றனர்.

# லொக்டவுனும் கணவன் மனைவி புரிந்துணர்வும்

ச.பாத்திமா ஷர்பின்



சாதாரணமாக ஒவ்வொரு மனிதனும் உணர்ச்சி, அறிவு என்கின்ற எதிரெதிரான விடயங்களின் ஆச்சரியமான கலவையாக காணப்படுகின்றான். எப்போதும் அவனால் உணர்ச்சி பூர்வமாக வாழ்ந்திட முடியாது. திருமணம் என்கின்ற போது ஆண், பெண் இருவருக்கும் இடையிலான ஒப்பந்தம் மட்டுமல்ல. இருமனம் ஒன்றாகி ஒரு மனமாக கலப்பதே திருமணம் எனப்படுகின்றது. இதனால்தான் கணவன் மனைவியில் பாசத்தை முன்னோர்கள் ஆயிரங்காலத்து பயிர் என்பதை சொல்லி வைத்தார்கள். கணவன், மனைவி உறவு என்பது இவ்வுலகிலுள்ள உறவுகளை விட ஆச்சரியத்தக்க உறவு எனலாம்.

திருமணத்துக்கு பிறகு திடீரென்று இணைந்த இருவரது உள்ளங்களிலும் பெருக்கெடுக்கும் காதல், பிரியம், நெருக்கம், தாம்பத்தியம், கருணை, கணிவு, பரிவு விட்டுக்கொடுத்தல் முதலானவற்றிக்கு நிகரில்லை. அதற்கான காரணம் என்னவென்று நாம் அறிய முனைவதில்லை. இறைவன் தன்னைத்தான் அறிவதற்கு ஓர் அற்புதமான சிருஷ்டியை படைக்க நாடினான். தன் கற்பனையில் உருவானபடி மனிதனைப் படைத்தான். அவனை ஆணாகவும் அவருக்கு துணையாக பெண்ணைப் படைத்தான்.. பெண்ணிடத்தில் ஒரு கவர்ச்சியையும் ஆணிடத்தில் கம்பீரத்தையும் வைத்தான். ஆகையால் ஆண் பெண்ணை விரும்புகிறான். பெண்ணும் ஆண்மையை விரும்புகிறாள்.

மனிதனின் மனங்கள் ஒரே நிலையில் இருக்காது.! காலம் ஓட ஓட காதல் கூடக் கசக்கத் துவங்கும். இருவரும் முறையாக கவனம் செலுத்தப்படவில்லை என்றால் திருமண பந்தம் தொய்வடையக்கூடும். இருவருக்கிடையில் முயற்சி இல்லாமல் இல்லறத்தில் எந்த நேரமும் மகிழ்சி நிறைந்திருக்குமென்று எண்ணி விடக் கூடாது. நாம் அரும்பாடுபட்டுக் கட்டிய அந்த இல்லற மகிழ்ச்சி நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டுமென்றால் கணவன் மனைவி இருவரது பங்களிப்பு மிக மிக அவசியம். திருமணபந்தம் என்ற மரம் தழைத்தோங்கி வளர வேண்டுமென்றால் செடியை ஊன்றி விட்டால் மட்டும் போதாது. அந்த மரம் வளர மண்ணுக்கு உரமிட்டு நீரிட்டு பராமரித்து பாதுகாக்கப்பட்டால்தான் முடியும். அதேபோல்தான் திருமணபந்தத்தில் இணைந்த கணவனும் மனைவியும் தன்னைத்தான் ஒருவரையொருவர் பரிந்து கொண்டு ஒருவரையொருவர் சார்ந்து வாழ்தல் வேண்டும். அப்போதுதான் அந்த குடும்பம் எனும் மரம் சிறப்பாக விருட்சமாக வளரும்.

இன்று கணவன் மனைவி உறவு பிரட்சினையில்லாமல் போவது என்பது அரிதாகி விட்டது. கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் குடும்பத்தில் இருவரும் சிரித்து பேசி மகிழ வாய்ப்பு குறைவு. அதுமட்டுமல்ல இணக்கமான உறவே அற்றுப் போய் கடமைக்கு வரும் சூழலுக்கு மாறி இருக்கின்றனர். இந்நிலை போய் தற்போது கொரோனா வைரஸால் வீட்டுக்குள் முடங்கி லாக்~டவுனை அனுபவித்து, சமூக விலக்கலைக் கடைப்பிடித்து வரும் நிலையில் அதனால் ஏற்படும் அழுத்தத்தால் குடும்பத்தில் கணவன், மனைவிக்கு இடையே சண்டை, தகராறு, மனக்கசப்புக்கள் உருவாகும் சூழல் உலக அளவில் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து திருமணமாகி ஒரு வருடத்துக்குள் கணவன், மனைவிக்கு இடையே ஒரு வெறுமை ஏற்பட்டு வருகிறது. சமூக வலைதளங்கள், வாட்ஸ்அப் போன்ற விஷயங்கள் மனிதர்களிடமிருந்து நம்மை பிரித்துவிட்டன. குடும்ப உறவுகள் சீர்குலைவதற்கு உள வியல் ரீதியான காரணங்கள் என்ன, கணவன்~மனைவி உறவு இதயத்துக்கு இணக்கமாகவும், உறவுக்கு இறுக்கமாகவும், இருக்க வழிகள் என்னவென்று பார்த்தோமானால் இன்று கணவன், மனைவி ஒருவருக்கொருவர் வார்த்தைகளில் சொல்வதை விட அன்பை செயல்களில் வெளிப்படுத்துவது சிறந்ததாக அமைகின்றது. அதே போன்று மன்னிக்கும் குணம் இருக்க வேண்டும். உங்களுடைய கணவனாக இருந்தாலும் சரி, மனைவியாக இருந்தாலும் சரி, ஏதாவது ஒரு தவறு செய்தால் மன்னித்து விடுங்கள். மனிதனாக பிறந்த எல்லோருமே தவறு செய்வது சகஜம் தான். மன்னித்து அவர்களை திருத்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்.

இருவரும் தினமும் ஏதாவது ஒரு விசயத்துக்காக ஒருரை ஒருவர் பாரட்டிக் கொள்ளுங்கள். ஒருவரது குறையை எந்தச் சூழலிலும் மற்றவருக்கு முன்னிலையில் குறிப்பிட்டுப் பேசக் கூடாது. இது மனதில் கசப்பான விதைகள் பரவாமல் தடுக்கும். பிறந்தநாள், திருமணநாள் என முககிய நாட்களை மறந்துவிடாமல் அன்பு செய்யுங்கள். நீ என் வாழ்வில் முக்கியம் என்பதை ஒருவருக்கொருவர் புரிய வைத்தல். ஒருவர் மற்றவரது உறவினர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். அவர்கள் குறைகளைப் பற்றி அதிகம் பேசாதீர்கள் இதுவே கணவன் மனைவி சண்டைகளுக்கு காரணமாக அமைகின்றது.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே வெளிப்படைத்தன்மை வேண்டும். அவ் வெளிப்படை வெளியில் போகாமல் இருந்தாலே பாதி பிரட்சினை இல்லாமல் போகும். மனைவிக்குத் தெரியாமல் கணவன் எந்த ஒரு செயலும் செய்யக் கூடாது. கணவர் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் கருத்துக்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். எப்போதும் மனைவியை கொளரவமாக நடத்த வேண்டும். எத்தனை அலுவல்கள் இருந்தாலும் மனைவியிடம் மனம் விட்டுப் பேசுவதற்கு நேரம் ஒதுக்குங்கள். இவ்வாறு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு இருக்கின்ற போதுதான் மனைவியை இரண்டாவது தாயாகப் பாப்பவர் சிறந்த கணவராகவும் கணவரை முதல் குழந்தையாக பார்ப்பவர் சிறந்த மனைவியாகவும் காணப்படுவார்கள்

## இவ்வார சிறுகதை




-ஜெனிசன்-

வானத்து நட்சத்திரங்கள் அழகை இரசித்தபடி முற்றத்தில் இருந்தாள் தாரகை. நட்சத்திரமே நட்சத்திரத்தை இரசிக்கும் அழகை பார்க்க இரண்டு கண்கள் போதாதுஎன்று கூறியபடி பக்கத்தில் வந்தமர்ந்தான் சந்தோஷ். என்ன தாரகை சந்தோஷமாக இருக்கீங்க போல என்றான். உள்ளார மென்சிரிப்போடு இல்ல சந்தோஷ் சும்மா தான் என்றாள். கவிதாயினி கவிமழையில் நனையுங்கோ என்றபடி சந்தோஷ் உள்ளே நகர்ந்தான். இறைவா அந்தநாட்கள் என் வாழ்வில் பெறுமதியான நாட்கள். ஆயுள்வரை தொடர அருள் புரியவேண்டும் என இறைவனை நினைத்தபடி அழகான அந்த நாட்களின நினைவுகளை மீட்டுப்பார்த்தாள்.

ஒரு நாள் அலுவலகம் செல்லும் வழியில் தாரகையின் மோட்டார் சைக்கிள் பிரச்சினை செய்ய தொடங்கியது. அப போது அவள் அருகில் வந்த காரில் இருந்தபடி குட்மோனிங் மெடம் என்ன புறோபிளம் லேட் ஆகல்லயா? வாங்களேன் என்னோட, ஈவினிங் வைக்க எடுக்கலாம் என்றான் சந்தோஷ். நேரத்தை பார்த்த தாரகை வேறு வழியின்றி ம் தங்ஸ் என்று கூறியபடி ஏறினாள்.

அலுவலக வேலை முடிந்து வெளியே வந்தாள் தாரகை. சந்தோஸின் சாரதி மோட்டார் சைக்கிளை தாரகையிடம் கொடுத்தார். சந்தோஸ் சேர் தான் சொன்ன சரி செய்தாச்சு என்று சாரதி நகர்ந்தார். தாரகை இரவு முழுவதும் அன்று நடந்தவைகளை பற்றியே யோசித்துக்கொண்டிருந்தாள். அடுத்த நாள் காலையில் தொலைபேசி மணி ஒலித்தது. ஓடி வந்து எடுத்தாள். நான் சந்தோஸ். வைக் ஓக்கேயா? என கேட்டான். ம்ம் தங்யு சோ மச் என்றாள்.

ஒரு கிராமத்து பெண் பல சவால்களை தாண்டி கல்வி கற்றவள்.கௌரவமான தொழில் செய்பவள். ஆனால் வாழ்க்கையில் மட்டும் ஏமாந்தவள் என்றபடி ஒரு பெருமூச்சு விட்டாள். இருந்தாலும் சந்தோஸ் நினைவுகள் அவளை அடிக்கடி தொட்டு சென்றன.

சந்தோஸ் தாரகைக்கு அடிக்கடி தொலைப் பேசி எடுத்து கதைக்க தொடங்கினான். தாரகையும் அவனுடன் அவள் சோகங்களை மறந்து கதைத்தாள். ஒரு நிம்மதி கிடைப்பதாக உணர்ந்தாள். மேடை நிகழ்வொன்றில் தாரகை பாடிய பாடலை சந்தோஸ் மெய்மறந்து இரசித்துக்காண்டிருந்தான். அன்று இரவு அது பற்றி தொலைபேசி ஊடாக பேசினான். அப்படியே பல விடயங்கள் பரிமாறினார்கள்.

இப்படியே தொடர்ந்தது அவர்களது நட்பு. ஒரு நாள் ஒரு விபத்தில் சிக்கிய தாரகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். சில தினங்களாக தாரகை பேசவில்லை என எண்ணிய சந்தோஸ் தாரகைக்கு தொலைபேசி எடுத்தான். அப்போது தான் தெரிந்தது தாரகையின் நிலைமை. அடுத்த சில நிமிடங்களில் தாரகையின் முன் நின்றான் சந்தோஸ். கனவா என தன்னையே கிள்ளி பார்த்த தாரகை சந்தோஸை பார்த்து புன்னகைத்தாள். என்ன? எப்ப நடந்த? எப்படி நடந்த நடந்த? வலிக்குதாடா? என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டு போனான். அவன் பதட்டத்தையே இரசித்துக்கொண்டிருந்தாள் தாரகை. அவளும் மென்மைகள் நிறைந்த பெண் தானே.

பெரிதாக ஒன்றுமில்லை. இன்றைக்கு வீட்ட போகத்தான் என்றாள் தாரகை. நான் கொண்டு விடுகிறேன் என்றான் சந்தோஸ். சந்தோஸ்க்கும் தெரியும் தார கைக்கு உறவுகள் இல்லை. வயசான அம்மா, அப்பா மட்டும் தான் என்று. அவளும் அப்பா, அம்மாவுக்கு கஸ்டமில்லாமல் வீட்டுக்கு போவோம் என நினைத்தாள். நட்பையும் கடந்த ஒரு மன நிலையோடு தாரகையை பிடித்துக்கொண்டு தன் காரில் ஏற்றி வீட்டில் கொண்டுவந்து விட்டான் சந்தோஸ். இதனை பார்த்த சிலர் கிசு கிசுக்கிசுக்க தொடங்கினர்.

தாரகை வீட்டுக்கு வந்த சந்தோஸ் தாரகையின் சோகம் நிறைந்த முகத்தை பார்த்து ஏதோ கவலையில் தாரகை இருப்பதை உணர்ந்து தாரகை ஏதாவது புறோபிளமா என கேட்டான். இல்லை என மௌனமாக தலை குனிந்தாள். நிலைமையை உணர்ந்த சந்தோஸ் தாரகையின் அம்மாவைப் பார்த்தான். அது ஒன்றுமில்லை தம்பி உறவுகள் எல்லாம் உதவி செய்ய இல்லை. உபத்திரம் செய்ய என்பது போல போயிற்று என்றாள். நீங்கள் வாறத தவறாக பேசியிருக்காங்க சிலர் என்றாள். சந்தோஸ் வேலை கொஞ்சம் இருக்கு வாறன் அம்மா, தாரகை நான் போய் வருகுறேன்என கூறி நகர்ந்தான்.

அன்று இரவு தாரகைக்கு தொலை பேசி எடுத்து பேசினான். தாரகை உங்களை பற்றி ஓரளவு தெரியும். பாஸ்ட் ஸ் பாஸ்ட். நான் உங்களை திருமணம் செய்ய விரும்புகிறேன். உங்கள் முடிவு என்ன? நிறைய நாளாக கேட்கவேண்டும் என்று நினைத்தேன். ஒரு கனம் செய்வதறியாது திகைத்து போய் நின்றாள். தாரகை என்றான். ம்ம் என்றாள். நன்றாக யோசித்து சொல்லுங்கள் உங்கள் சிகடந்தகால கதை எதுவும் வேண்டாம். புதியதோர் வாழ்க்கை வாழலாம் என்றான். மௌனங்கள் சில நிமிடங்கள். நான் உங்கள் நல்ல பதிலை எதிர்பார்த்து காத்திருப்பேன் என்று தொலைபேசியை துண்டித்தான்.

சந்தோஸ் சொன்ன விடயம் தொடர்பாக தன் தாயிடம் கூறினாள் தாரகை. தாயும் மிகவும் மனமகிழ்ந்தாள். நல்ல பெடியன், நாங்கள் செத்த பிறகு உனக்கு யார் துணை என தினமும் வேதனைப்படுகிறேன் என கண்கலங்கினாள். மிகுந்த குழப்பத்துடன் தூங்கப் போனாள். தூக்கம் வராமல் தவித்தாள்.

அதிகாலையில் சந்தோஸ் தொலை பேசி எடுத்தான். குட் மோனிங் என்றான். தாரகையும் குட் மோனிங் என்றாள். நல்ல செய்திகள் உண்டோ மெடம் என்றான். அம்மாவிடம் பேசுங்கள் என்றாள் தாரகை. சந்தோஸ் தாரகை அம்மாவிடம் பேசினான். இப்படி ஒன்று நடக்காதோ என இறைவனை மன்றாடாத நாளே இல்லை தம்பி. கடவுள் தந்த பொக்கிஷம் நீங்கள் என கண்கலங்கினாள். இருவருக்கும் திருமணம் நடந்தது. தாரகை தாரகைஎன அவளை தாங்குவான் சந்தோஸ். இரண்டு குழந்தைகள் இருந்தும் தாரகையையும் குழந்தை போலவே பார்ப்பான் சந்தோஸ். இப்படி வாழ்க்கை கிடைக்கும் என்று நான் நினைக்கவே இல்லை கடவுளே என கடவுளுக்கு நன்றி சொன்னாள். என்னம்மா கவிதையே கவிதை எழுதி முடிந்ததா? தூக்கம் வரவில்லையா? என பக்கத்தில் வந்தமர்ந்தான் சந்தோஸ். ஒரு குழந்தை போல் அவன் தோளில் சாய்ந்தாள் தாரகை. எனக்கு மறுபிறவி தந்த கடவுள் நீங்கள் சந்தோஸ் என கண்கலங்கினாள். எனக்கு இப்படியோர் அன்பான மனைவி தந்த கடவுளுக்கு நானும் நன்றி செலுத்தவேண்டும் என சொல்லி சிரித்தான். இருவரும் மலர்ந்த முகத்துடன் சென்றனர்.இருவரும் மிகவும் சந்தோஷமாக வாழ்கின்றனர்.

# பசுமை பொருளாதார புரட்சியின் ஊடான வறுமை ஒழிப்பு திட்டம்

## கற்றாழை பயிர்ச் செய்கையை வீட்டுத்தோட்டமாக்குதல்



**ஆசாத் எம் அலியார்**
**திட்ட பணிப்பாளர்**

கற்றாழை வளர்ப்பினை வீட்டுத் தோட்டங்களில் செய்து வருமானங்களை பெற்றுக்கொள்ளுக்கூடிய ஒரு சிறந்த வாய்ப்பை கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனையுடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக நடைமுறைப்படுத்திவருகின்றோம். இத்திட்டம் ஜனாதிபதியின் சுபிட்சத்தை நோக்கிய திட்டத்தின் ஒரு அங்கமாக செயற்படுத்தப்படுகின்றது. இச் செய்கையானது முற்றும் முழுதாக சேதனப்பசளை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. முதற்கட்டமாக அம்பாரை மாவட்டத்தில் சுமார் 140 சமூர்த்தி பயணாளிகள் கற்றாழை உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். அவர்களில் பலர் மாதாந்தம் சுமார் 25 ஆயிரம் ரூபாய் வருமானம் பெறும் நிலையில் உள்ளனர். ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கவுள்ளோம். இவற்றுக்கு மேலதிகமாக கற்றாழை உற்பத்தியை மேற்கொள்ள ஆர்வம் உள்ள அனைவருக்கும் அதற்கான ஏற்பாடுகளை செய்துதருவதற்கு தயாராகவுள்ளோம். தங்கள் பிரிவு பிரதேச செயலகத்துடனோ, எம்முடனோ தொடர்பு கொள்ள முடியம்.

உற்பத்தி செய்யும் கற்றாழைகளை தனியார் துறையினர் கொள்வனவு செய்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. சந்தைப்படுத்தலுக்கு முழுமையான உத்தரவாதம் எம்மிடம் உண்டு. அத்தோடு விரைவில் அம்பாரை மாவட்டத்தில் கற்றாளை உற்பத்தி பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலையொன்றும் அமைக்கப்படவுள்ளது.

இதே வேளை, கிழக்கு மாகாண பசுமைப்புரட்சியின் ஊடான வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வீட்டுக்கு வீடு கற்றாழை வளர்ப்பை ஊக்கப்படுத்தும் செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, கற்றாழை உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களுக்கு விசேட பயிற்சிகளும் வழங்குகின்றோம்.




**கிழக்கு மாகாண பசுமைப் பொருளாதார புரட்சி-ஊடான வறுமை ஒழிப்புத்திட்டம் எனும் கருத்திட்டத்தின் ஊடாக அம்பாறை மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட கற்றாழை பயிர்ச்செய்கையை ஊக்குவித்து 50,000 சுயதொழில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.**

Marketed By :
ALOE FARM
ESTABLISHMENT
6 th Mile
Ampara Road,
Akkaraipattu
T.P :067 3121645



கற்றாழையை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தியை nRich கம்பனி ஆரம்பித்துள்ளது...


குறைந்த இட வசதியில் கூடிய உற்பத்தி

# கற்றாழை உற்பத்தி செய்து வருமானத்தையும், ஆரோக்கியத்தையும் பெறுவோம்...

Marketed By :
ALOE FARM
ESTABLISHMENT